அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிற்கு

## சிகிச்சையளிக்க மறுத்த வைத்தியர்



02 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 516 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 26ஆம் திகதி திங்கட்கிழமை
(09.05.2022) ஹிஜ்ரி - 1443, ஷவ்வால் - 07 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

மண்ணெண்ணெய் வரிசையில் நின்று வீடு திரும்பிய முதியவர்

## உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் பரிதாபம்

02 பக்கம்

# விட்டுக்கொடுப்பாரா மஹிந்த - நீக்குவாரா கோட்டா? இவ்வாரம் முக்கியத்துவம் பெறும் கொழும்பு அரசியல்!



**யோ.தர்மராஜ்**

பொருளாதார பிரச்சினையால் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான தீர்மானமிக்க வாரமாக இவ்வாரம் அமையும் என அரசியல் வட்டார தகவல்கள் தெரிவித்தன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தன்னுடைய பதவியிலிருந்து விலகி, இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு வழிவிடுமாறு ஜனாதிபதி உள்ளிட்ட பலரும் கோரிக்கை விடுக்கின்ற நிலையில், அவர் பதவி விலகுவதில் இழுபறி நிலைமையே காணப்படுவதாகவும் அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை தீர்க்கும் பட்சத்திலேயே பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என அரசியல், சிவில், மதத்தலைவர்கள் மற்றும் முழு நாட்டு மக்களும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என மக்கள் கோரினாலும், பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை உடனடியாக பதவி விலகி அனைத்துக் கட்சிகளை இணைத்து இடைக்கால அரசாங்கத்தை அமைத்து, நாட்டை நெருக்கடிகளிலிருந்து மீட்குமாறு அழுத்தங்கள் தொடர்கின்றன.

எனினும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தன்னுடைய பதவியிலிருந்து விலகுவதற்கு தயாரா இல்லையா என்பது உள்ளக வட்டார தகவல்கள் தெரிவித்து வந்தன. இந்த நிலையில், கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை சந்திப்பின்போது, பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையை பதவி விலகுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார். 02 பக்கம்



## பிரதமருக்கு ஆதரவு தெரிவித்து ஆதரவாளர்கள் கொழும்புக்கு

இன்று காலை அலரி மாளிகையில் அணி திரளுவர்

02 பக்கம்

**யோ.தர்மராஜ்**

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரியதால் அவர் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நகர சபை தலைவர்கள் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் இன்று அலரிமாளிகைக்கு வருகை தரவுள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மஹிந்தவுக்கு ஆதரவு தெரிவிக்க இன்று கொழும்பு வரவேண்டாம்!

### ஜனாதிபதி தரப்பில் கோரிக்கை

**யோ.தர்மராஜ்**

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகலை ஆட்சேபித்து இன்று கொழும்பில் திரளவுள்ள ஆளுங்கட்சி அரசியல்வாதிகளை நேற்று தொடர்புகொண்ட ஜனாதிபதி தரப்பு, அவர்களை அலரிமாளிகைக்கு வரவேண்டாம் என கோரியுள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. 02 பக்கம்

## பிரதமர் அநுராதபுரத்தில் வழிபாடு; எதிர்ப்பினை வெளியிட்ட மக்கள்!



02 பக்கம்




முன்னாள் பிரதமர், ரணிலை சாணக்கியன் எம்.பி ஏசியதும் அதற்கு ரணில் பார்லிமென்ட்டில் டோஸ் கொடுத்ததும் பழைய கதை...

புதிய கதை என்ன தெரியுமா? ரணிலிடம் மன்னிப்புக் கேட்க யூ.என்.பி. பிரமுகர்கள் ஊடாக தூது அனுப்பிக்கொண்டிருக்கிறாராம் சாணக்கியன் எம்.பி.

ஆனால் அதற்கான நேரத்தை வழங்காத ரணில், இனி தமிழ்க் கூட்டமைப்புடன் ஒட்டுமில்லை, உறவுமில்லை என்று கூறிவிட்டாராம்.



சமையல் எரிவாயு சிலிண்டரை பெற கால்கடுக்க காத்து நின்று, களைத்துப் போய் அமர்ந்திருக்கும் பெண்மணியொருவர்..
படப்பிடிப்பு - கிரிஷான் காரியவசம்

## எரிபொருளுக்கு நீண்ட வரிசை; சிலிண்டர் கோரி ஆர்ப்பாட்டங்கள்

நாடளாவிய ரீதியில் மக்கள் பெரும் சிரமம்

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



"நாட்டை காப்பாற்ற பதவிக்கு வாங்கோ என்று சொன்ன அதே கூட்டம், நாட்டை காப்பாற்றவேணும் விரைவா வீட்டுக்கு போங்கோ எண்டு சொல்லுது...
வாழ்க்கை ஒரு வட்டம் பாருங்கோ..."

## புதிய பிரதமராக கரு ஜயசூரியவை நியமிப்பது தொடர்பில் ஆலோசனை



சர்வகட்சி இடைக்கால அரசின் பிரதமர் பதவிக்கு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. 02 பக்கம்

## அவசரகால சட்டத்தை உடனடியாக நீக்க இலங்கை மருத்துவ சங்கம் வலியுறுத்து

தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகால சட்டத்தை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவசரகால சட்டத்தை அமுல்படுத்துவதனூடாக அமைதியான முறையில் போராட்டத்தை மேற்கொள்வோர் வன்முறையில்..... 02 பக்கம்

## பாதுகாப்புத்தரப்பினரின் விடுமுறைகள் இரத்து

நாட்டில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்து பாதுகாப்புப் படை வீரர்களின் விடுமுறையும் இரத்து செய்யப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. 02 பக்கம்

மக்கள் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி வெற்றியாளர் ஆகுங்கள்




இறுதிச் சீட்டிழுப்பின் வெற்றியாளருக்கு
ரூ.10,000,000/-
மாதாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.1,000,000/- × 11 மாதங்கள்
ரூ.11,000,000/-
வாராந்த வெற்றியாளர்களுக்கு தங்கப் பவுண்
நாளாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.10,000/-
மேலும் மேலும் பணம் அனுப்பி, வெல்லும் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள்
செல்லுபடியாகும் காலம் 2022 பெப்ரவரி 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை மட்டுமே.
+9477 157 6356
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation
AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

# எரிவாயு கப்பல் புதன்கிழமை இலங்கை வந்தடையவுள்ளது

சமையல் எரிவாயுவை ஏற்றிய கப்பலொன்று எதிர்வரும் புதன்கிழமை (11) நாட்டை வந்தடையவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயுவை ஏற்றி வரும் 2 கப்பல்களுக்கான கட்டணம் இன்று (09) செலுத்தப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் விஜித்த ஹேரத் குறிப்பிட்டார்.

அதற்கமைய, தலா 3,500 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிவந்த 2 கப்பல்களுக்கும் 7 மில்லியன் டொலர் செலுத்தப்படவுள்ளது.

இந்தக் கப்பல்கள் ஓமானிலிருந்து வருவதுடன், இவற்றில் ஒரு கப்பல் தற்போது மாலைதீவை வந்தடைந்துள்ளதாக லிட்ரோ நிறுவனத் தலைவர் கூறினார்.

இதனிடையே, இந்திய கடன் வசதியின் அடிப்படையில் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்காக 120 மில்லியன் டொலரை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனைத்தவிர, எரிவாயுவை கொள்வனவு செய்வதற்காக உலக வங்கியின் நிதியுதவியின் கீழ், 70 மில்லியன் டொலர் நாட்டுக்கு கிடைக்கவுள்ளது. அதற்கமைய, நாட்டில் தற்போது எரிவாயுவுக்கு காணப்படும் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் விஜித்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

## எரிபொருளுக்கு நீண்டவரிசையில்.....

***யோ.தர்மராஜ்***

எரிவாயு கோரி நாட்டின் பல பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களால் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், எரிவாயுவுடன் வந்த லொறியை மறித்து தங்களுக்குத் தேவையான எரிவாயுவை மக்களே எடுத்துச்சென்ற சம்பவமும் பதிவாகியுள்ளது.

அதன்படி, எரிவாயு கோரி கிராண்ட்பாஸ், நாவின்ன, செங்கலடி போன்ற பல பகுதிகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்றுமுன்தினம் (07) முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் நேற்று (08) அதிகாலைமுதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இவர்கள் பாதையை மறித்து, எரிவாயு சிலிண்டர்களை வைத்து போராட்டம் நடத்தினர்.

இதனையடுத்து, அங்கு நேற்று (08) மாலை எரிவாயுவுடன் வருகைதந்த லொறியை மறித்து, தங்களுக்குத் தேவையான எரிவாயு சிலிண்டர்களை போராட்டக்காரர்களே எடுத்துக்கொண்டனர்.

இளைஞர்கள் லொறியின் மீது ஏறி, எரிவாயு சிலிண்டர்களை எடுத்துச் சென்றதுடன், அங்கிருந்த ஏனையோருக்கு எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியாதுபோனது.

இதனையடுத்து, அங்கு வந்த பொலிஸார் நிலைமையை கட்டுப்படுத்த முற்பட்டதுடன், லொறிக்கு அருகிலிருந்த சிலிண்டர்களையும் கைப்பற்றி லொறியில் ஏற்றினர். எனினும், மக்களின் எதிர்ப்பை அவர்களால் கட்டுப்பாட்டுக் கொண்டுவர முடியாதுபோனது.

இதேவேளை, கொழும்பு - ஹைலெவல் வீதியின் நாவின்ன பகுதியில் எரிவாயு கோரி நேற்று (08) காலை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது.

நீண்டநேரமாக பாதையை மறித்து போராட்டம் நடத்தியதுடன், போக்குவரத்துக்கு இடமளிக்குமாறு ஒரு தரப்பினர் கோரிக்கை விடுத்த நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் அவர்களுக்குமிடையில் பதற்ற நிலைமை ஏற்பட்டது. இதனால், அவ்வழியான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்தது.

இதேவேளை, மட்டக்களப்பு - செங்கலடி சந்தியில் பல்கலைக்கழக மாணவர்களால் எரிவாயு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு பல்கலைகழகத்தின் வந்தாறுமூலை வளாகத்திலிருந்து பேரணியாக சென்ற மாணவர்கள் செங்கலடி சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, எரிவாயுவுக்காக பல பகுதிகளில் மக்கள் நேற்று (08) நீண்ட வரிசையில் நின்றதையும் காணக்கூடியதாக இருந்தது.




மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

தமிழன் தமிழன் ஜூனியர்
கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

## யாழ். தனியார் காணியொன்றில் அமைக்கப்பட்ட விகாரைக்கு இராணுவத் தளபதி சவேந்திர வருகை

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் படைத் தலைமையகத்துக்கு நேற்றுக் காலை வருகைதந்த இராணுவத் தளபதி, விகாரைக்குச் சென்று கட்டுமானப் பணிகளை நேரில் ஆராய்ந்தார்.

வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விகாரையை அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டதுடன், கட்டுமானப் பணிகளை அனுமதிப்பதில்லை என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

எனினும், கடும் எதிர்ப்பையும் மீறி காங்கேசன் துறை திஸ்ஸ ரஜமஹா விகாரை அமைக்க இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவால் அடிக்கல் நடப்பட்டது. விகாரை கட்டுமானப் பணிகளுக்கு தடை விதிக்கக் கோரி நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இந்நிலையில், விகாரையின் கட்டுமானப் பணிகள் தொடர்பில் இராணுவத் தளபதி கள ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

## பிரதமர் அநுராதபுரத்தில்...

***யோ.தர்மராஜ்***

வரலாற்றுச் சிறப்புமிக்க அநுராதபுர ஜயஸ்ரீ மகா போதிக்கு வழிபாடுகளுக்குச் சென்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அங்குள்ள மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

''உங்களிடமிருந்து நாளை (இன்று 09) நல்ல பதிலை எதிர்பார்க்கின்றோம். நீங்கள் வேலை செய்தீர்கள். தற்போது போதும்'' எனக் கூறிய மக்கள், கோஷங்களை எழுப்பி கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

அநுராதபுர ஜயஸ்ரீ மகா போதிக்கு நேற்று (08) விஜயமொன்றை மேற்கொண்டிருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசிகளையும் பெற்றுக்கொண்டார்.

வழிபாடுகளுக்குப் பின்னர் அங்கிருந்து வெளியேறியபோது, மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். குறிப்பாக, அங்கிருந்த ஒருவர், "கையெடுத்து கும்பிடுகின்றோம். நீங்கள் முடிவொன்றை எடுத்து, நாட்டை எங்களுக்கு மீட்டுத்தாருங்கள்" அப்பச்சி எனக் கூறியதுடன், "உங்களிடமிருந்து நல்ல பதிலை நாளை எதிர்பார்க்கின்றோம். நீங்கள் வேலை செய்தீர்கள். தற்போது போதும்" எனவும் கூறினார்.

இதனையடுத்து, ருவான்வெலிசாய வழிபாடுகளிலும் ஈடுபட்ட பிரதமர், ருவான்வெலிசாய மகாநாயக்க தேரர்களிடம் ஆசி பெற்றுக்கொண்டு வெளியேறியபோது, அங்கிருந்து சிலர் அவரை வணங்கி, பணிவாக பேசினர்.

எனினும், அங்கு வந்த ஒருவர், ''கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன், நாங்களும் எங்களுடைய குழந்தைகளும் பாதையில் துன்பப்படுகின்றோம். சேர் இந்த நாட்டை கட்டியெழுப்பியதுடன், நாட்டையும் பாதுகாத்தவர். எனவே, தற்போது நல்ல முடிவை எடுத்து, இந்த நாட்டை மீட்பதற்கு இடளியுங்கள் சேர்'' எனக் கூறினார்.

அதன்பின்னர் மிரிசவெட்டிய விகாரைக்குச் சென்ற பிரதமர் அங்கு கலாநிதி ஈத்தல வெட்டுனுவெவே ஞானதிலக்க நாயக்க தேரரிடமும் ஆசி பெற்றுக்கொண்டு வெளியேறும் போது, அவ்விடத்திற்கு வந்த சிலர் பிரதமருக்கு கடும் எதிர்ப்புகளை வெளியிட்டனர்.

அங்கு வந்திருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், அப்பச்சி பதவியை விட்டு வெளியேறுங்கள், திருடர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு கொடுக்க வேண்டாம், அவர்கள் நாட்டை சீர்குலைத்தவர்கள் எனக் கூறியும் பதாகைகளை ஏந்தியும் எதிர்ப்புகளை வெளியிட்டனர்.

## அவசரகால சட்டத்தை...

ஈடுபடுவதற்கு வழிவகுக்கும் என இலங்கை மருத்துவ சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் எதிர்ப்பிற்கு செவிசாய்த்து பிரச்சினைக்கு உடனடி தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது, தற்போதைய ஸ்திரமற்ற நிலையை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் சாதாரண குடிமக்களின் நல்வாழ்வுக்கு தீங்கு விளைவிப்பதுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

## மண்ணெண்ணெய் வரிசையில்...

இரண்டு தினங்களாக மண்ணெண்ணெய் வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்தும் மண்ணெணெய் கிடைக்காத நிலையில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் அளவெட்டி மத்தியை சேர்ந்த கந்தசாமி நடராசா (வயது 80) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த முதியவர் கடந்த வெள்ளிக்கிழமை மண்ணெண்ணெய் வாங்குவதற்காக அளவெட்டி - மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நீண்ட வரிசையில் காத்திருந்துள்ளார். சில மணி நேரத்தில் மண்ணெண்ணெய் முடிந்துவிட்டது என ஊழியர்கள் அறிவித்தனர். அதனால் அவருக்கு மண்ணெண்ணெய் கிடைக்காமலே வீடு திரும்பியிருந்தார்.

மறுநாளான கடந்த சனிக்கிழமை மீண்டும் மண்ணெண்ணெய் வாங்குவதற்காக சென்று நீண்டநேரம் வரிசையில் காத்திருந்துள்ளார். அவர் அருகில் சென்றதும் மண்ணெண்ணெய் முடிவடைந்துவிட்டது என ஊழியர்கள் தெரிவித்தனர்.

அதனால் கடும் மனவிரக்தியுடன் வீடு திரும்பியவர் , மனைவியிடம் இன்றும் தன்னால் மண்ணெண்ணெய் வாங்க முடியவில்லை என கவலையுடன் கூறி படுத்தவர், சில நிமிடங்களில் படுக்கையிலேயே உயிரிழந்துள்ளார்.

முதியவரின் இறப்பு அப்பகுதி மக்களிடம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## அமைச்சர் பிரசன்ன ...

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றபோது, அவருக்கு சிகிச்சையளிக்க வைத்தியர் மறுத்துவிட்டார்.

இதையடுத்து, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார்.

நாரஹேன்பிட்டியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

தைரோய்ட் பிரச்சினைக்கு சிகிச்சை பெறவே அமைச்சர் பிரசன்ன, வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். போஷாக்கு நிபுணர் டொக்டர் ரணில் ஜயவர்தனவிடம் அவர் சிகிச்சை பெறவிருந்தார்.

பிரசன்ன ரணதுங்க இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் டொக்டர் ரணில் ஜயவர்தனவிடம் சிகிச்சை பெற்றுள்ளதுடன், நேற்றுமுன்தினம் அவர் மூன்றாவது முறையாக சிகிச்சைக்காக சென்றுள்ளார்.

''பிரசன்ன ரணதுங்க என்ற நோயாளி சிகிச்சைக்காக காத்திருக்கும் விடயம் தெரிந்ததும், அவர் முன்பதிவிற்காக செலுத்திய பணத்தை மீள கையளித்து அவரை வைத்தியசாலையிலிருந்து அனுப்பி வையுங்கள் என்றேன்'' என டொக்டர் ரணில் ஜயவர்தன ஊடகங்களிடம் தெரிவித்தார்.

தான் சிரமப்பட்டு வைத்தியசாலைக்கு வந்ததாகவும், தனது வாகனத்திற்கு எரிபொருள் கிடைக்காத காரணத்தினால் நண்பரின் வாகனத்தில் வந்ததாகவும் மருத்துவர் தெரிவித்திருந்தார். அண்மைக்காலமாக வைத்தியர்களை கூட பிரசன்ன இழிவுபடுத்தியதாகவும், அரசியல்வாதிகளின் செயற்பாடுகளினால் நாடு துயரத்தில் உள்ளதால் அரசியல்வாதிகளுக்கு சிகிச்சை அளிப்பதில்லை என தனிப்பட்ட முறையில் தீர்மானித்துள்ளதாகவும் ரணில் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

## புதிய பிரதமராக ...

இதற்கு பல கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அந்தச் செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 13 யோசனைகளுக்கமைய, இடைக்கால அரசு அமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியும் நேற்றுமுன்தினம் இணக்கம் வெளியிட்டது.

எனவே, இடைக்கால அரசு அமைக்க ஜனாதிபதி முடிவெடுத்தால் அரசியல் கட்சிகளுக்கு அப்பால் நடுநிலைவாதியாக கருதப்படும் கரு ஜயசூரியவை நியமிக்கலாமென பலதரப்பிலும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

கரு ஜயசூரிய நாடாளுமன்றம் வருவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியில் எம்.பி. ஒருவர், தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

## பாதுகாப்புத்தரப்பினரின்...

நாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும்வகையில் அவசரகால சட்டத்தை ஜனாதிபதி மீண்டும் நடைமுறைப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு எதிராக நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், தற்போது ஜனாதிபதி அவசரகால சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளமைக்கு உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கடும் கண்டனங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி மக்களின் அமைதியான போராட்டம் மீது கைவைக்க வேண்டாம் எனவும் அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த பின்னணியிலேயே படையினரின் விடுமுறைகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

## மஹிந்தவுக்கு ஆதரவு...

நாட்டின் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு பிரதமரையும் அமைச்சரவையையும் உடனடியாக பதவி விலகுமாறு ஜனாதிபதி கடந்த வெள்ளிக்கிழமை கூறியுள்ளார். அவருடைய கோரிக்கையை ஏற்று, பிரதமரும் பதவி விலகுவதற்குத் தயாராக இருப்பதாக அறிவித்தார்.

இவருடைய இந்த அறிவிக்கையையடுத்து, அவருக்கு ஆதரவான உள்ளூராட்சி உறுப்பினர்கள் சிலர் நேற்றுமுன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வீட்டுக்குச் சென்று அவரை சந்தித்துள்ளதுடன், அவரை பதவி விலக வேண்டாம் எனவும் கோரியுள்ளனர்.

அத்தோடு, உள்ளூராட்சி உறுப்பினர்கள், நகர சபைத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இன்று (09) அலரிமாளிகைக்கு வருகை தரவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே யாரையும் அலரிமாளிகைக்கு வருகை தர வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சிலருக்கு தொலைபேசி ஊடாக அறிவித்துள்ளதாக அறியமுடிந்தது. அதன்படி, சில நகர சபை உறுப்பினர்களுடன் தொலைபேசியில் பேசிய ஜனாதிபதி, இங்கு வந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு யாரும் அழுத்தம் கொடுக்க வேண்டாம் எனவும், பதவி விலகுவது குறித்து முடிவை எடுப்பதற்கு அவருக்கு இடமளிக்குமாறும் கோரியுள்ளார்.

அத்தோடு, 6 மாதங்களில் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க முடியும் என்பதால், இன்று (09) இங்கு வந்து யாரும் அழுத்தம் கொடுக்க வேண்டாம் எனவும் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் கோரிக்கைக்கு செவி சாய்த்துள்ள சில நகர சபைத் தலைவர்கள், இன்று (09) அலரிமாளிகைக்கு வருகை தருவதை கைவிட்டுள்ளதாகவும் அறிய முடிந்தது.

## விட்டுக்கொடுப்பாரா..

எனினும், மக்களின் போராட்டங்களுக்கும் அழுத்தங்களுக்கும் அஞ்சி தான் பதவி விலக முடியாது. பதவி விலகுவது பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவருக்கு ஆதரவாக சில அமைச்சர்களும் குரல் கொடுத்துள்ளனர்.

ஆனால், தன்னுடைய நிலைப்பாட்டுக்கு இணக்கம் தெரிவித்தாக வேண்டும் என ஜனாதிபதி காரசாரமாக தெரிவித்துள்ளார். இதனையடுத்து, தான் பதவி விலகுவதே பிரச்சினைக்குத் தீர்வு என்றால், பிரதமர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு, எதிர்க்கட்சியில் அமர்வதாகவும் அதற்கான அறிவிப்பை இன்று (09) வெளியிடுவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எனவே, பிரதமர் பதவி விலகுவார் என கூறப்பட்டபோது, அவரை பதவி விலக வேண்டாம் என அவருக்கு ஆதரவான அமைச்சர்கள், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களும் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து வலியுறுத்திவருகின்றனர். இதனால், பிரதமரின் பதவி விலகலில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றன.

ஆனால், மக்களின் அழுத்தங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் தீர்வு காண்பதற்கு பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தை நீக்கிவிட்டு, இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு இடமளிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஜனாதிபதி முன்னெடுத்துவருவதாக உள்ளக வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

ஒருவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று (09) அல்லது இவ்வாரத்திற்குள் பதவி விலகாவிட்டால், ஜனாதிபதி பதவி நீக்குவார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. எனவே, பிரதமர் பதவி விலகுவதில் பெரும் இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், அரசியல் ரீதியான முக்கியமான முடிவுகளை எடுக்கும் தீர்மானமிக்க வாரமாகவும் இவ்வாரம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பிரதமருக்கு ஆதரவு...

நாட்டின் நெருக்கடிக்கு தீர்வு பெற்றுக்கொள்ள இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலக வேண்டும் என ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்று, பிரதமர் பதவி விலகுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

எனினும், அவர் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்யக்கூடாது எனக்கூறி நேற்றுமுன்தினம் (07) மாலை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் குழுவினர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளனர். இதன்போது, அங்கிருந்த ஒருவர், பிரதமர் பதவியில் இருந்து நீங்கினால் இதற்கு முன்னர் ரணில் விக்ரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கிய பின்னர் அவருக்கு வழங்கிய அதே தீர்மானங்கள் மீண்டும் எடுக்கப்பட வேண்டும். உங்களை பாதுகாப்பதற்கான பலத்தை நாங்கள் உருவாக்கியுள்ளோம். நீங்கள் பதவி விலக வேண்டாம், ஜனாதிபதியாக பதவி விலக்கட்டும், மீண்டும் உங்களை நாங்கள் பிரதமராக தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம் எனக் கூறினார். இதனையடுத்து, நீங்கள் விலக மாட்டீர்கள்தானே என ஒருவர் வினவியதற்கு, இல்லை, இல்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதிலளித்தார்.

''சேர் சென்றால், எண்ணெய் கிடைக்கும், எரிவாயு கிடைக்கும், டொலர் கிடைக்கும் என்றால் நீங்கள் பதவி விலகுங்கள். அவ்வாறு நடக்காதே.. ஒன்று ஜனாதிபதியை பதவி விலகச் சொல்லுங்கள். அவரை வீட்டிற்கு போக சொல்லுங்கள், உங்களை யாரும் பதவி விலகச் சொல்லவில்லை'' என பெண் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதனையடுத்து, அங்கிருந்து ஒருவர், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், நகர சபைத் தலைவர்கள், உள்ளூராட்சித் தலைவர்களை இன்று அலரிமாளிகைக்கு அழைத்துவந்து பிரதமரின் பதவியை பாதுகாப்போம் எனக் கூறினார்.

எனவே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இன்று (09) பதவி விலகுவதாகக் கூறப்படுவதால், அவர் அந்த பதவியிலிருந்து விலகக்கூடாது எனக் கூறி 15 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அலரிமாளிகைக்கு செல்லவுள்ளதாக தெரியவருகிறது.

நாடளாவிய ரீதியில் உள்ள மொட்டு ஆதரவாளர்களை இன்று (09) அலரிமாளிகைக்கு அழைத்து வர பிரதேச சபை தவிசாளர்கள் ஏற்கனவே திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த குழுவினர் இன்று (09) அலரிமாளிகைக்கு வந்து பிரதமரை சந்தித்து பின்னர் பாதயாத்திரையாக ஜனாதிபதி மாளிகைக்கு அருகிலுள்ள கோட்டா கோ கம வளாகத்திற்குச் சென்று அங்கும் ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 250 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் தென் கடலில் மீட்பு

## வெளிநாட்டுப் பிரஜைகள் எழுவர் கைது

கடற்படையினர் மற்றும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் இணைந்து தென் கடலில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த படகை முற்றுகையிட்டு, 240 கிலோ ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர். இதன் பெறுமதி 250 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

தெற்கு கடற்பரப்பில் சுமார் 630 மைல் தொலைவில் பயணித்த படகை முற்றுகையிட்ட போது அதில் பயணித்த வெளிநாட்டவர்கள் ஏழுபேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் படகை காலி துறைமுகத்துக்குக் கொண்டுவர கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குறித்த ஹெரோயின் போதைப்பொருள் எங்கிருந்து கொண்டுவரப்பட்டது, முகவர்கள் யாரென்பது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினருக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களுக்கும் இடையில் கொழும்பில் அமைந்துள்ள அச்சங்கத்தின் கட்டடத்தொகுதியில் நேற்று (08) கலந்துரையாடல் இடம்பெற்றது.

# மக்களுக்காக அனைத்து விதமான தியாகங்களையும் செய்வோம்

## சட்டத்தரணிகள் சங்கத்துடனான சந்திப்பின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

இந்நாடு பேரழிவை சந்தித்திருக்கும் இத்தருணத்தில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு நாட்டை கட்டியெழுப்புவதில் முனைப்போடு ஈடுபடுவதாகவும் அதற்காக எந்தவிதமான தியாகத்தையும் செய்வதற்கு இருமுறை சிந்திக்க மாட்டோம் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தை கொழும்பில் சந்தித்ததன் பின்னரே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியினால் முன்வைக்கப்பட்ட 21ஆவது சீர்திருத்தத்தின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்கி, ஜனநாயகத்தை பலப்படுத்துவது மிக முக்கியமான விடயம் எனத் தெரிவித்தார். கடமை மற்றும் பொறுப்புக்கூறல் ஊடாக அரச நிர்வாகம் கட்டியெழுப்பப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்துள்ள முன்மொழிவிற்கும், ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள 21 ஆவது சீர்திருத்தத்திற்கும் பாரிய வேறுபாடுகள் இல்லை எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அந்த முன்மொழிவுகளை அடிப்படையாகக்கொண்டு முற்போக்கான தீர்மானங்களை மேற்கொண்டு செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.



இப்போது காணப்படுகின்ற பிரச்சினைக்கு மிக முக்கியமான காரணம் சர்வாதிகாரம் மிக்க நிறைவேற்று ஜனாதிபதி முறைமையாகும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதை உடனடியாக நீக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

சட்டத்தரணிகள் சங்கத்துடன் இங்கு ஒருங்கிணைப்பாளர்களாக இணையுமாறு அழைப்பு விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். நாட்டிற்கு ஜனநாயகத்தை பெற்றுத்தருவதற்காக ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும் முற்போக்கான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இத்தருணத்தில் முக்கியத்துவம் பெறுவது இடத்தைப் பெற்றுக் கொள்வதோ பொறுப்புகளை பெற்றுக் கொள்வதோ அல்ல. முக்கியத்துவம் பெறுவது சமூக மற்றும் தேசிய கடமைகளை நிறைவேற்றுவது ஆகும்.

அதற்காக முன்னெடுக்கவேண்டிய அனைத்து விதமான தியாகங்களுக்கும் நாம் தயாராக உள்ளோம். நாடு முன்னேற வேண்டுமாயின் 21ஆவது சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதே போன்று உடனடியாக நிறைவேற்று அதிகாரம் நீக்கப்படவேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு எல்லா சவால்களையும் ஏற்றுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

# இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைதுசெய்யப்படுவார்கள்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தினால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் நாடாளுமன்றத்திற்கு அருகில் உள்ள வீதியில் இடம்பெற்றது போல ஆர்ப்பாட்டக்காரர்கள் பல மணிநேரம் முக்கிய வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களுக்கும் நாடாளுமன்றம் செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிப்படுத்த வேண்டியது எங்கள் கடமை என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொலிஸார், படையினர் பிரதேச செயலாளர்களின் உதவியுடன் அவசரகால நிலையை நடைமுறைப் படுத்தியுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்ற பாதுகாப்பு சபைக் கூட்டத்தின் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தனியாக அதிகாரிகளை சந்தித்துள்ளார். நிலைமை கட்டுப்பாட்டை மீறி செல்வதை தவிர்ப்பதற்காகவும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காகவும் அவசரகாலநிலை அறிவிக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.





எரிவாயு பெற்றுக்கொள்வதற்கு கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்கள் நேற்று (08) நீண்ட வரிசையில் காத்திருந்தனர். (படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்

# மட்டு. செங்கலடியிலும் கோட்டா கோ கம; பெருந்திரளானோர் இணைந்து ஆர்ப்பாட்டம்









(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து, அரசாங்கத்தை விரட்டியடிப்போம் அரசியல் முறையை கவிழ்ப்போம் எனும் தொனிப்பொருளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (08) பல்கலைகழக வளாகத்தில் ஆரம்பித்து செங்கலடி சந்திவரை பேரணியாக சென்று அங்கு கோட்டா கோ கம அமைக்கப்பட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்ததையடுத்து கிழக்கு பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், பௌத்த தேரர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் நேற்றுக் காலை 9 மணிக்கு ஒன்றிணைந்தனர்.

இதனையடுத்து உணவு இல்லை, பால்மா இல்லை, எரிபொருள் இல்லை, மின்சாரம் இல்லை, கொள்ளைக்கார பொருளாதார முறைமைக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம், மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு கொடு, அடிக்காதே அடிக்காதே விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே போன்ற அரசுக்கு எதிரான பல்வேறு வாசகங்கள் கொண்ட சுலோகங்களை ஏந்தி, கோஷங்கள் எழுப்பியவாறு பல்கலைக்கழகத்தில் இருந்து ஆர்ப்பாட்டமாக ஆரம்பித்து செங்கலடி சந்தியை சென்றடைந்தனர்.

அங்குள்ள செங்கலடி பஸ்தரிப்பு நிலையத்தில் கோட்டா கோ கம கூடாரம் அமைத்து தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து அந்த பகுதியில் பொலிஸார் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# புதையல் தோண்டிய நால்வர் கைது

**அநுராதபுரம் செய்தியாளர்**

புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நான்கு பேரை கவரக்குளம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்றுமுன்தினம் மாலை கவரக்குளம் பொலிஸ் பிரிவிலுள்ள வெல்லாரகம காட்டுப் பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது புதையல் தோண்டிக்கொண்டிருந்த சந்தேக நபர்கள் நான்கு பேரை கைதுசெய்துள்ளனர். அத்துடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் சிலவற்றையும் கவரக்குளம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் அநுராதபுரம், கவரக்குளம், மிஹிந்தலை பகுதிகளை வசிப்பிடமாக கொண்ட 36,43,56,58 வயதுடையவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கவரக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக பெருந்திரளான மக்கள் நேற்று (08) நீண்ட வரிசையில் காத்திருந்தனர். (படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்)

# புகையிரத சேவைகள் சிலவற்றுக்கு பாதிப்பு

பிரதான ரயில் மார்க்கத்தின் ரயில் போக்குவரத்து நேற்று சில மணிநேரம் தாமதமாகியதாக புகையிரத சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கடுகதி ரயில், களனி ரயில் நிலையத்திற்கு அருகில் இயந்திர கோளாறு காரணமாக நேற்று சில மணிநேரம் போக்குவரத்து தாமதமாகியதாக திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை 11.50 மணியளவில் கொழும்பு கோட்டையில் இருந்து குறித்த ரயில் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

ரயில் இயந்திரக் கோளாறினை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இயந்திரக் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக பிரதான ரயில் மார்க்கத்தின் ஏனைய புகையிரத சேவைகளும் பாதிக்கப்பட்டன.












கொழும்பு காலிமுகத்திடலில் போராட்டக்காரர்களால் அமைக்கப்பட்டுள்ள கோட்டா கோ கம, மைனா கோ கம ஆகியவற்றில் நேற்று (08) காலை முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களை படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

நாட்டில் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியதன்மூலம் உளநாட்டிலும், வெளிநாட்டிலும் பெரும் விமர்சனங்களை எதிர்கொண்டிருக்கிறது அரசாங்கம். அதிலும் ஜனாதிபதி கோட்டாபய மீதான எதிர்வினைகள் தீவிரமடைந்துள்ளன.

அவசர நிலையை ஜனாதிபதி பிரகடனப்படுத்தியமைக்கு அவரது அரசு கூறிய காரணங்கள் வேடிக்கையானவை.

நாட்டில் பெரும் பொருளாதார, அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றமை உண்மை. அதனால் மக்கள் எழுச்சி அரசுக்கு எதிரான கிளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது என்பதும் உண்மைதான்.

ஆனால், வெளிநாடுகளும், இராஜதந்திரிகளும் சுட்டிக்காட்டுகின்றமை போல் மேற்படி பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிரான மக்களின் உணர்வெழுச்சி அஹிம்சை முறையிலேயே முன்னெடுக்கப்படுகின்றது. மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரள்கின்ற சூழ்நிலையில் வன்முறைகள் பெருமளவில் வெடிப்பதற்கான வாய்ப்புண்டு. ஆனால், மக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் சகிப்புத்தன்மை, பொறுமை, அஹிம்சை முறைமை தாராளமாகவே கடைப்பிடிக்கப்படுகின்றன.

அப்படியிருக்கையில், இந்த அவசரகால நிலைமை ஏன்? இதன் பின்னால் இருக்கும் நோக்கம், இலக்கு, கருத்து யாது? என்று மேற்குலகு முற்கூட்டியே சந்தேகத்துடன் கேள்வி எழுப்புகின்றது.

"இலங்கை மக்களின் வாழ்க்கையைப் பாதுகாத்து அத்தியாவசியப் பொருட்கள் வழங்கல் மற்றும் சேவையை முன்னெடுக்கவே அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதென அரசாங்கத் தகவல் திணைக்கள அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

அத்தியாவசியப் பொருட்களின் விலை மக்களின் கைகளை விட்டு எகிறி எங்கோ போய்விட்டது. சாதாரண பாமரக் குடும்பம் ஒரு இறாத்தல் பாண் வாங்கவே விழி பிதுங்கும் நிலைமை. எரிபொருள், எரிவாயு உட்பட பல அவசரப் பொருட்களுக்கு ஒரு புறம் பற்றாக்குறை என்றால்

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மே 09ஆம் திகதி, திங்கட்கிழமை

# உணராத அரசு!

மறுபுறம் உச்ச விலை. மருந்துப் பொருட்கள் இல்லை. அதனால் மருத்துவ சேவை முடங்கிவிட்டது. பாடசாலைக் கல்வி குழம்பிவிட்டது. எழுதுவதற்குக் காகிதாதிகளுக்குக் கூடப் பற்றாக்குறை.

இந்தச் சீத்துவத்தில் எந்த அத்தியாவசிய சேவையை முன்னெடுப்பதற்கு அரசுக்கு அவசரகால நிலைமை தேவைப்படுகின்றது? இது ஒரு நியாய மான கேள்வி. அடுத்தது, இலங்கை மக்களின் வாழ்க்கையைப் பாது காப்பதற்கு அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்படிருப்பதாகவும் அரச தரப்பின் அறிக்கை கூறுகின்றது.

உண்மையில் அதுவல்ல காரணம், ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்களை ஓடித் தப்புங்கள் என்று மக்கள் கிளர்ந்துள்ளனர். மக்களிடமிருந்து தங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவே ஆட்சியாளர்கள் அவசர காலச் சட்டத்தை கையில் எடுத்திருக்கின்றார்கள் என்பதே நிஜம்.

ஆகவே, இந்த அவசரகால நிலைப் பிரகடனம் என்பது அரசு கூறுவது போல் மக்களைக் காப்பதற்கு அல்ல. சீற்றமுற்றிருக்கும் மக்களிடமிருந்து ஆட்சியாளர்களைக் காப்பாற்றுவதற்குத்தான்.

மக்களிடம் கெட்ட பெயரைச் சம்பாதித்துவிட்ட இந்த ஆட்சியாளர்கள், இனி ஒரு தடவை ஜனநாயகத் தேர்தல்களில் முகங்கொடுத்து மீள மாட்டார்கள் என்பது அவர்களுக்கே தெரியும்.

அதனால் கிடைத்த வாய்ப்பை இறுதிவரை அனுபவித்து, சுகிர்த்துக் கொண்டு, சூறையாடிச் செல்ல விரும்புகின்றார்கள். இன்னொரு தடவை மக்களைச் சந்திக்க வாய்ப்பில்லை என்ற யதார்த்தத்தை உணர்ந்து, அது பற்றி அலட்டிக்கொள்ளாமல் அல்லது அதற்கான பிரக்ஞையின்றி காரியமாற்றுகின்றார் கோட்டாபய.

அவருடன் அணி சேர்ந்திருப்போரின் கதியும் இனி அதுதான். மீண்டும் ஒரு தடவை மக்கள் முன் வரும் ஆசையை அவர்களும் சேர்ந்து துறந்து விடுவதுதான் அவர்களுக்குள்ள ஒரே மார்க்கம்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு எவ்வாறு உதவுவதென்பது குறித்து ஆராய சர்வதேச நாணய நிதியம் இன்று இலங்கையுடன் பேச்சுகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கவுள்ளது. அதற்குள் இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை இருக்க வேண்டும். ஆனால், இங்கே நிலைமையெல்லாம் தலைகீழாக இருக்கிறது. தமது அத்தியாவசிய தேவைகளுக்காக மக்கள் வீதிகளில் இறங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதுபோதாதென்று அவசரகால நிலை பிரகடனம் வேறு.

அரசாங்கம் யதார்த்தத்தை உணர்வதாகத் தெரியவில்லை. அரசு அப்படி உணரும்போது எல்லாமே நடந்து முடிந்திருக்கும்.

# மெய்க்கு நிகராகாது மெய்நிகர்...

இன்று மெய்நிகர் (வேர்ச்சுவல்) என்ற வார்த்தையைப் பலரும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளோம். பல பேச்சாளர்களும் திகதி கேட்கும் கையோடு நேரத்தையும் கேட்கிறார்கள். ஒவ்வொரு மணிநேரத்திலும் ஒவ்வொரு நாட்டினரோடு உரையாடும் வாய்ப்பு வாய்த்துள்ளதே. பேச்சாளர்கள் மட்டுமா? பல அமைப்புகளும், தமது உறுப்பினர்களோடு மெய்நிகர் சேவை மூலம் கூட்டங்கள் நடத்துகின்றனர். மணிக்கணக்கில் பயணம் செய்து, செலவு செய்து கூட்டங்களை நடத்திய காலமெல்லாம் மாறிவிட்டது.

மெய்நிகர் சேவையால் தொழில் நிறுவனங்களும் பலன் பெறத் தொடங்கியுள்ளன. இது பணியாளர்கள், உரிமையாளர்கள் என இரு தரப்பினருக்குமே நல்வாய்ப்பாக அமைந்துள்ளது. ஒவ்வொரு நாளும் சில மணிநேரம் பயணம் செய்து பணியிடத்திற்குச் செல்லவேண்டிய தேவையும் குறைந்துள்ளது. இதன்மூலம் நிறுவன ஊழியர்கள், அங்கு செயல்படும் குளிர்சாதன வசதிகள், அவற்றுக்கான மின்கட்டணம் என பலவும் குறையத் தொடங்கியுள்ளன. அதோடு மட்டுமல்ல, பல்வேறு நிறுவனங்களும் தங்கள் பணியிடப் பரப்பளவைக் குறைத்துக் கொள்ளலாமா எனவும் யோசிக்கத் தொடங்கியுள்ளன.

கல்வித்துறையிலும் கல்வி மெய்நிகர் சேவையின் மூலமாக கிடைக்கத் தொடங்கியுள்ளது. ஒரு தகவலைப் பற்றி அறிந்துகொள்ள நாம் பயணித்துத்தான் ஆகவேண்டும் என்ற நிலை மாறத்தொடங்கியுள்ளது. ஆசிரியர் மாணவர்களுக்கு போதித்துக்கொண்டிருக்கும்போதே தமது ஐயங்களை குறுஞ்செய்தி மூலம் பரிமாறிடும் வாய்ப்பும் கிடைக்கிறது. இப்படி பல நல்ல நல்வாய்ப்புகளும் இதனால் கிட்டியுள்ளன.

இந்த மெய்நிகர் உலகின் மறுபக்கத்தையும் பார்க்க வேண்டியுள்ளது. எந்தவொரு தொழில்நுட்பமும் எந்தளவுக்கு வசதியைத் தருகிறதோ அதே அளவுக்கு பாதிப்பையும் தரவல்லது. நமது கண்களும் காதுகளும் இயல்பாக இயங்கினால் மட்டுமே நீண்ட நாட்களுக்குப் பாதிப்பில்லாமல் இயங்க இயலும். மெய்நிகர் கூட்டங்களில் கலந்துகொள்வோர் பெரும்பாலும் கவனக்குவிப்பிற்காக செவிவாங்கிகளை பயன்படுத்துகின்றனர். செவிவாங்கிகளை காதின் அருகில் கொண்டுசென்று செவிப்பறையை எப்போதாவது அதிரச் செய்தால் பரவாயில்லை. எப்போதும் இதனை உபயோகிப்பது நல்லதல்லவே.



அதுபோலவே தொடர்ந்து கைபேசியையோ மடிக்கணினியையோ பார்த்துக்கொண்டிருப்பதும் கண்களின் ஆரோக்கியத்திற்கு பாதகங்களை ஏற்படுத்தலாம். மேலும் அவ்வப்போது கண்களை இமைத்து நமது கண்களில் சுரக்கும் தண்ணீரை கண்பரப்பில் பரப்பிக்கொள்ள வேண்டும் என மருத்துவர்கள் ஆலோசனை கூறுகின்றனர். மெய்நிகர் கூட்டத்தில் ஆழ்ந்திருக்கும்போது எங்கே கண்களை சிமிட்டுவது?

பேச்சாளர்கள் பேச்சை நேரில் கேட்பதற்கும் மெய்நிகர் சேவையில் கேட்பதற்கும் பெரிய வேறுபாடு உள்ளது. அதுபோல் அவர்களும் தமது சுவைஞர்களை நேரில் பார்த்துப் பேசும் பரவசத்தை இதன்மூலம் அடைய முடியாது. தமது உரையை அரங்கிலுள்ள ஆயிரம் நபர்கள் கேட்கும் பரவசத்தை மெய்நிகர் சேவையால் ஒரு போதும் தர இயலாது.

சேவை நிறுவனங்கள் தங்கள் உறுப்பினர்களோடு தொடர்புகொள்ள வேண்டுமானால், அவர்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடுவதே நல்ல பலனைத் தரும். நிறுவனங்களின் தலைவர்களுக்கும் ஊழியர்களுக்குமான உயிரோட்டமான தொடர்பு நேரில் சந்தித்தல், மகிழ்ந்து உரையாடுதல், ஊழியரின் இல்லத்துக்கே சென்று உணவருந்துதல் போன்றவற்றால் மேம்படும். மெய்நிகர் கூட்டங்களில் இது சாத்தியமல்ல.

சொல்லித் தருவது மட்டும் ஆசிரியர்களின் பணியல்ல. மாணவர்களின் ஒழுக்கம், நடத்தைகளில் ஆரோக்கியமான மாற்றங்களைக் கொண்டுவருவதும்தான். அதற்கான திட்டங்களைத் தீட்டி தொடர்ந்து அதனை நடைமுறைப்படுத்தி வெற்றி காணவேண்டும். ஒருவேளை அதில் தோல்வியடைந்தால் மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். மாணவர்களின் இயல்பூக்கங்களில் ஏற்படும் மாற்றங்களை துல்லியமாகக் கணித்து தேவையான ஆலோசனைகளை வழங்க வேண்டும். கல்வி மெய்நிகர் சேவை மூலம் வழங்கப்படும் நிலையில் இதில் எதனையும் செய்ய இயலாது.

மெய்நிகர் சேவை மனிதர்களின் கால அட்டவணையில் ஏராளமான மாற்றங்களை ஏற்படுத்துவது கண்கூடு. ஏற்கனவே சர்வதேச நிறுவனங்களில் பணிபுரிவோர் அந்தந்த நாடுகளின் நேரத்திற்கேற்ப தமது வாழ்வியல் செயல்பாடுகளை மேற்கொள்ளத் தொடங்கி அதனால் உடல் ரீதியான பாதிப்புகளுக்கு ஆளாகி வருகின்றனர். தற்போது உள்நாட்டு நிறுவனங்களில் பணிபுரிவோரும் வீட்டிலிருந்தே பணிபுரிகிறோம் என்ற பெயரில் தமது அன்றாட கால அட்டவணையை தயாரிக்க இயலாது அல்லலுறுகின்றனர். இதனால் இரவுநேரம் கடந்தும் வீட்டிலிருந்தபடியே நிறுவனங்களின் கூட்டத்தில் இணைந்திருக்கின்றனர். இதனால் அவர்கள் தமது குடும்பத்தினருடன் செலவிடும் அருமையான பொழுதை இழக்க நேரிடுகிறது.

இவ்வாறு பணிபுரிவோரின் கால அட்டவணையைத் தயாரிக்க இயலாத நிலையில் அவர்கள் தங்கள் அன்றாட நடவடிக்கைகளான நடைபயிற்சி, பொழுதுபோக்கு, வழிபாடு செய்தல் போன்றவற்றையும் திட்டமிட இயலாத நிலை ஏற்படுகிறது. மேலும் ஒரே இடத்தில் நீண்டநேரம் அமர்ந்திருப்பதால் அந்த நேரத்தில் நொறுக்குத்தீனிகளை அதிகம் எடுத்துக்கொள்வதும் நடக்கிறது. பலருக்கும் உடல்பருமன் ஏற்பட இதுவே காரணமாகவும் அமைந்துவிடுகிறது.

பல நேரங்களில் மெய்நிகர் கூட்டங்களை நடத்துவோர் எவ்வித முன் தயாரிப்பும் இல்லாமல் இயல்பான கூட்டங்களைப்போல் மணிக்கணக்கில் நடத்துகின்றனர். இதனால் இணைந்திருப்போரின் பொறுமை எல்லை மீறவும் செய்கிறது.

அதற்காக மெய்நிகர் சேவையை ஒதுக்க வேண்டியதில்லை; கொண்டாடவேண்டியதும் இல்லை. இயல்பாக மனிதர்கள் நட்பை விரும்புபவர்கள், நகைச்சுவையைக் கொண்டாடுபவர்கள், கூடித் தொழில்செய்வதை போற்றுபவர்கள். இவற்றுக்கேற்ப மனிதர்கள் இயல்பாக வாழவும், குடும்பத்தினருடன் இருக்கவும், உடல்நலனைப் பராமரிக்கும் வகையிலும் மெய்நிகர் சேவையின் பயன்பாடு மேம்பட வேண்டும்.

**முனைவர் என். மாதவன்**

# குப்பைத் திட்டில் உயிரிகள்

அண்மையில், எலான் மஸ்க், ட்விட்டரை வளைத்துப்போட்டார். அதே நேரத்தில், பசுபிக் பெருங்கடல் குப்பைத் திட்டிலிருந்து வளைத்துப்போட்ட பல உயிரினங்களின் படங்களை ட்விட்டரில் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார் ரெபெக்கா ஹெல்ம்.



அமெரிக்காவின் வடக்கு கரோலைனா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளரான இவரது புகைப்படங்களுள் ஒன்று நீலக் கடல் டிராகன் பற்றியது. இந்த டிராகன் மீன், தன் எதிரிகளை கொன்று அவற்றின் உடல் பாகங்களை தன் உடலில் கவசம்போல் அலங்கரித்துள்ளது.

பசுபிக் கடலில் சேரும் குப்பை தொன் கணக்கில் சேர்ந்து ஒரு பெரிய தீவாகவே மிதக்கத் தொடங்கியுள்ளது. இது 1997இல் முதன்முதலாக கண்டறியப்பட்டது. வானிலிருந்து பார்த்தால் அத்தனை பெரிதாகத் தெரியாது. ஆனால், கடலடியில் தொகுப்பாக மிதக்கும் இந்த திட்டின் பரப்பளவு, 16 இலட்சம் சதுர கி.மீ. அதாவது, மூன்று பிரான்ஸ் நாட்டின் பரப்பளவுக்குச் சமம்.

பெரும்பாலும் பிளாஸ்ரிக் கழிவுகளாலான இந்தத் திட்டு, நிலையாக ஓரிடத்தில் இருக்காது. கடலடி நீரோட்டத்திற்கு ஏற்றபடி நகரும் தன்மை கொண்டது. ஆனால், இந்த குப்பைத் தீவில் தற்போது பல்லாயிரம் உயிரினங்கள் குடியேறி, பல்கிப் பெருகத் தொடங்கிவிட்டன. ஓஷன் கிளீன் அப் போன்ற சுற்றுச்சூழல் அமைப்புகள், கடல் குப்பையை அள்ளி அகற்றும் பணியில் ஈடுபடும்போது, இந்த உயிரினங்களும் கடலிலிருந்து அகற்றப்படுகின்றன.

எனவே, அந்த முயற்சியைக் கைவிடவேண்டும் என்றும், இனிமேல் கடலுக்குள் குப்பை வராமல் தடுக்கப் பாடுபடவேண்டும் என்றும் கடல் உயிரியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரியலுக்கும் சூழலியலுக்கும் ஓர் இழுபறியை ஏற்படுத்தியுள்ளது பசுபிக் பெருங்கடல் குப்பைத் திட்டு.

# உடல் சூட்டை தணிக்கும் உடை!

வெயில் காலத்தில் குளிரூட்டும் கருவி, குளிர் காலத்தில் கதகதப்பூட்டும் கருவி. இப்படி உலகெங்கும் வசிப்பிட தட்பவெப்பத்தை பராமரிக்கும் கருவிகள் இயங்குவதால், சுற்றுச்சூழலுக்குக் கேடு அதிகரிக்கிறது. இதற்கு மாற்றாக, அமெரிக்காவிலுள்ள லைப்லேப்ஸ், இருவகை உடைகளை உருவாக்கியிருக்கிறது. வெளி தட்பவெப்பத்தை கையாள்வதற்குப் பதிலாக, இந்த உடைகள், அணிபவரின் உடல் வெப்பநிலையை சற்றே மாற்றியமைக்க உதவுகிறது.



உதாரணமாக, லைப்லேபின் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள கூல் லைப் ரீ சேர்ட்டை அணிபவரின் உடல் வெப்ப நிலை 3 பாகை பரனைட் அளவுக்கு குறைவாகவே இருக்கும். மறுசுழற்சி செய்து, மூலக்கூறு அளவில் மாற்றியமைக்கப்பட்ட பாலியெத்திலினால் ஆன இந்த ரீ சேர்ட், அணிபவரின் உடல் சூட்டை வேகமாக வெளியே கடத்தும் தன்மை கொண்டது.

இதனால், கூல் லைப் ரீ சேர்ட்டை அணி பவர் சற்று குளிர்ச்சியாகவே உணர் வார். இதை வெயில் காலத்தில் அணிந்து கொண்டால், அவருக்கு வீட்டில் மின் விசிறியோ, ஏசி கருவியோ தேவைப்படாது. அதேபோல் வோர்ம் லைப் ரீ சேர்ட்டை அணிபவருக்கு உடல் எப்போதும் சற்று கதகதப்பாகவே இருக்கும். இதை குளிர் அதிகமுள்ள பகுதிகளில் அணிந்தால், வீட்டுக்குள் விறகு அடுப்பு அல்லது மின் சூடேற்றும் அடுப்பு போன்றவற்றின் பயன்பாட்டை வெகுவாக குறைக்க முடியும்.

லைப் லேபின் அதிகாரிகள், கூல் லைப் மற்றும் வோர்ம் லைப் உடைகளை அணியும் வீட்டில் ஆண்டு முழுதும் ஆற்றல் சேமிப்பு அதிகமாக இருக்கும் எனத் தெரிவிக்கின்றனர். ஒரு நபருக்கு ஆண்டுக்கு 153 பவுண்ட் கார்பன்டையோக்சைட் காற்றில் கலப்பது தடுக்கப்படும். கேட்க நன்றாக இருக்கிறது. இது நடைமுறைக்கு வந்தால், பல வீடுகளில் மின் கட்டணம் குறையும். சூழல் பாதிப்பும் குறையும்.

## நக்கல் நமசிவாயம்

தம்பிக்கு, அண்ணன் பயந்தது எந்த நாட்டில தெரியுமோ...?



# இன்றைய நாளில்...

- 1092 – லிங்கன் பேராலயம் புனிதப்படுத்தப்பட்டது.
- 1502 – கொலம்பஸ் புதிய உலகிற்கான தனது கடைசிப் பயணத்தை (1502 - 1504) எசுப்பானியாவிலிருந்து தொடங்கினார்.
- 1612 – கண்டி மன்னர் செனரத்துடன் மார்செலஸ் டி பொசோடர் தலைமையிலான டச்சுத் தூதுக்குழு உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.
- 1874 – குதிரையால் செலுத்தப்படும் உலகின் முதலாவது பயணிகள் வண்டி பம்பாய் நகரில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1877 – ருமேனியாவின் விடுதலை அறிவிக்கப்பட்டது.
- 1901 – அவுஸ்திரேலியாவின் முதலாவது நாடாளுமன்றம் மெல்பேர்னில் திறந்துவைக்கப்பட்டது.
- 1919 – இலங்கையில் முதன்முதலாக உணவுக் கட்டுப்பாடு அமுலுக்கு வந்தது. அரிசிப் பயன்பாடு மாதமொன்றிற்கு சராசரியாக 30,000 தொன்னிலிருந்து 20,000 ஆகக் குறைக்கப்பட்டது.
- 1927 – கன்பராவில் அவுஸ்திரேலியா வின் புதிய நாடாளுமன்றம் திறந்துவைக்கப்பட்டது.
- 1933 – மகாத்மா காந்தி தனது சட்டமறுப்பு இயக்கத்தைக் கைவிட்டார்.
- 1956 – உலகின் 8ஆவது உயரமான மலையான மனஸ்லுவின் உச்சி முதன் முதலாக சப்பானிய மலையேறிகளால் எட்டப்பட்டது.
- 1985 – காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.
- 2018 – மலேசியப் பொதுத் தேர்தல்,
- 2018: மலேசியாவின் தேசிய முன்னணி கட்சி 1957 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் தடவையாகப் பெரும் தோல்வியடைந்தது.






முந்தல் - கருங்காளிச்சோலை அருள்மிகு ஸ்ரீ கல்யாண முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் (07) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி ஸ்ரீ ஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியாரின் அருளாசியுடன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மாதவ ரவிச்சந்திர குருக்கள் தலைமையில் பூஜைகள் இடம்பெற்றன. (படங்கள்: ரஸீன் ரஸ்மின)

# குடிவரவு-குடியகல்வுத் திணைக்கள சேவைகள் இன்றுமுதல் மீள ஆரம்பம்

## ஒருநாள் சேவைகள் இடம்பெறமாட்டாதென அறிவிப்பு

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கணினி முறைமையில் மேற்கொள்ளப்பட்ட அவசர பழுதுபார்ப்பு நடவடிக்கை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கடவுச்சீட்டு விநியோக நடவடிக்கைகள், சாதாரண சேவையின் கீழ் இன்று திங்கட்கிழமைமுதல் மீண்டும் ஆரம்பிக்கப்படுமென குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் ஒருநாள் சேவைகள் இடம்பெறமாட்டாது எனவும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் குடிவரவு-குடியகல்வுத் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மே மாதம் 09ஆம் திகதி திங்கட்கிழமை, 05, 06 மற்றும் 09ஆம் திகதிகளில் சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக நேரத்தை ஒதுக்கிக்கொண்ட மற்றும் மே மாதம் 05ஆம் திகதி சாதாரண சேவையின் கீழ் விண்ணப்பங்களை ஒப்படைப்பதற்கு வருகைதந்த, திணைக்களத்தினால் இலக்கம் அல்லது திகதி முத்திரையைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலும் மே மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஒப்படைப்பதற்கு திகதியையும் நேரத்தையும் ஒதுக்கிக்கொள்ளவேண்டியது கட்டாயமாகும். http://www.immigration.gov.lk எனும் இணையத்தளத்துக்குப் பிரவேசித்து அல்லது 0707101060 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து திகதியையும் நேரத்தையும் ஒதுக்கிக்கொள்ள முடியும்.

ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டுகளை வழங்கும் பொருட்டு கணினி முறைமையை சீரமைப்பதற்கு திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆளணியினர் மும்முரமாக நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கூடிய விரைவில் ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினால் வழங்கப்படும் ஏனைய சேவைகள், பிராந்திய அலுவலகங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள் மற்றும் விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வுச் சேவைகள் என்பன வழமைபோன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



புரவலர் புத்தகப் பூங்காவின் 41ஆவது வெளியீடான மறைந்த கவிஞர் (மர்ஹூம்) கலாபூஷணம் எம்.பி.சிறாஜ்டீனின் முதலாவது கவிதை தொகுதியான “இன்னும் திருந்தவில்லை” நூல்கள் கையளிக்கும் நிகழ்வு புரவலரின் இல்லத்தில் நேற்று (08) காலை நடைபெற்றபோது நூலாசிரியரின் புதல்வர் எஸ்.எம்.றம்சியிடம் புரவலர் வழங்குவதையும் தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், தொகுப்பாசிரியர் கவிஞர், மேமன் கவி ஆகியோர் உடன் காணப்படுகின்றனர்.

# இலங்கை மற்றும் திமோர்-லெஸ்தே இராஜதந்திர உறவுகள் நிறுவல்



இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் திமோர்-லெஸ்தே ஜனநாயகக் குடியரசுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவது தொடர்பான கூட்டு அறிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு கடந்தவாரம் நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரத் தூதரகத்தில் நடைபெற்றது.

அந்தந்த அரசாங்கங்கள் சார்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கைத் தூதுவரும் நிரந்தரப் பிரதிநிதியுமான மொஹான் பீரிஸ் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கான திமோர்-லெஸ்தேயின் தூதுவரும் நிரந்தரப் பிரதிநிதியுமான கார்லிட்டோ நூன்ஸ் ஆகியோர் கூட்டு அறிக்கையில் கைச்சாத்திட்டனர்.

தென்கிழக்காசியாவிலுள்ள ஒரு தீவு அரசான திமோர்-லெஸ்தே, திமோர் தீவின் கிழக்குப் பகுதியில் சுமார் 1.3 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. கச்சா - பெற்றோலியம், இயற்கை எரிவாயு, கோப்பி, காய்கறிகள் மற்றும் இரும்பு ஆகியன திமோர்-லெஸ்தேயின் முக்கிய ஏற்றுமதி ஆகும். இலங்கை மற்றும் திமோர்-லெஸ்தே ஆகிய இரு நாடுகளும் ஆசியான் பிராந்திய மன்றத்தின் உறுப்பினர்களாக உள்ளதுடன், இதில் இரு நாடுகளும் தமது இருதரப்பு உறவுகளை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

இலங்கைக்கும் திமோர்-லெஸ்தேவுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகளை ஸ்தாபிப்பதன் மூலம் இரு நாடுகளின் பரஸ்பர நன்மைக்காக அரசியல், சமூகப் பொருளாதார மற்றும் கலாச்சாரத் துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் தற்போதுள்ள நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் எரிபொருள், எரிவாயு குறித்த ஆய்வுகளுக்கு முறையான வேலைத்திட்டமொன்றை தயாரிக்காமை குறித்து கோபா குழு கவனம்



மன்னார் கடல் நிலப்படுகையில் காணப்படும் எரிபொருள் மற்றும் இயற்கை எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்கு வேலைத்திட்டம் தயாரிக்கப்படாமை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) கவனம் செலுத்தியது.

வலுசக்தி அமைச்சு தொடர்பான 2018, 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராயும் நோக்கில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவண்ண தலைமையில் கடந்த வியாழக்கிழமை கூடியபோதே இவ்விடயம் பற்றி கவனம் செலுத்தப்பட்டது. இக்குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆவார்.

2016ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு ஆராய்ந்து பெற்ற தகவல்களுக்கமைய மன்னார் கடல் நிலப்படுகையிலிருந்து 5 பில்லியன் பரல் எரிபொருளும், 5 ட்ரில்லியன் கனஅடி இயற்கை எரிவாயு காணப்படுவதாகவும், இது 60 வருடகாலத் தேவையைப் பூர்த்திசெய்யப் போதுமானதெனவும் அன்றையதினம் வருகைதந்திருந்த அமைச்சு செயலாளர் தெரிவித்திருந்தார். நாட்டின் மின்சார உற்பத்தியை 1130 கிலோவோட் வரை அதிகரிக்க இவற்றைப் பயன்படுத்த முடியும் என்றும், இயற்கை எரிவாயுவை உற்பத்திசெய்வதன் ஊடாக 25 வருடங்களுக்குள் பல்வேறு துறைகளின் ஊடாக 200 பில்லியன் அமெரிக்க டொலர் நன்மைகளைப் பெற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், அடையாளம் காணப்பட்ட இரண்டு கனிய இருப்புகளிலிருந்து இயற்கை எரிவாயுவை வணிக ரீதியாக உற்பத்தி செய்வதன் மூலம் நாட்டின் பல்வேறு துறைகளிலிருந்து பெறக்கூடிய வருவாயைப் பெறுவதற்கு அல்லது முறையான ஏற்பாட்டைச் செய்யாதது குறித்து கோபா குழு அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பியது. இதற்கு நம்பகமான முதலீட்டாளரைக் கண்டுபிடிப்பது கடினம் என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த விடயத்தைக் கையாள்வதற்கு இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை எனவும் தெரிவித்தனர்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் நவீனமயமாக்கல் மற்றும் விரிவாக்கம், புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. சபுகஸ்கந்த தளத்தில் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூற்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிகழ்வில் கலந்துகொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர். அதன்படி, இது தொடர்பாக அறிக்கையைத் தாக்கல் செய்யுமாறு கோபா குழு பரிந்துரைத்தது.

பணியாளர்களின் வெற்றிடங்கள் குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டதுடன், நாட்டின் தினசரி எண்ணெய் தேவை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் பி.வை.ஜி.ரத்னசேகர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான துமிந்த திஸாநாயக்க, திஸ்ஸ அத்தநாயக்க, அசோக அபேசிங்க, சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே மற்றும் காதர் மஸ்தான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பேருவளையில் சிறுவர்களுக்கு பரிசளிப்பு வழங்கும் நிகழ்வு

பீ.எம் முக்தார்

பேருவளை சீனன்கோட்டை பெருகமலை ஸாக்கிரீன் ஜும்ஆ பள்ளிவாசலில் புனித ரமழானை முன்னிட்டு நடைபெற்ற ஹிஸ்பு மஜ்லிஸில் பங்குபற்றிய சிறுவர்களுக்கு பரிசளிக்கும் வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் அல்ஹாஜ் அர்ஷத் ஸவாஹிர், பொருளாளர் அஹ்ஸன் பௌஸி, உறுப்பினர் ருஸ்தி நவாஸ் ஆகியோர் நிகழ்வில் அதிதிகளாக பங்குபற்றினர்.

இம்முறை பிரதேசத்தைச் சேர்ந்த 90 வரையிலான சிறுவர்கள் ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

பள்ளிவாசல் பிரதம இமாம் மௌலவி எஸ்.எச்.எம்.இம்ரான் (ஹுமைதி), உதவி இமாம் மௌலவி முஹம்மத் ரிஸ்கி (ஹிழ்ரி) ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மத்ரஸா பராமரிப்பு குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் பலரும் கலந்துகொண்டனர்.




இம்மஜ்லிஸில் பங்குபற்றிய சிறார்களை ஊக்குவிக்கும் வகையில் பணப்பரிசும் வேறு பரிசிப் பொருட்களும் வழங்கப்பட்டன.

பேருவளை பகுதியிலுள்ள எந்தவொரு பள்ளிவாசலிலும் இல்லாத வகையில் சுமார் 90 பேர் வரையிலான சிறுவர்கள் மேற்படி மஜ்லிஸில் பங்குபற்றியமை விசேட அம்சமாகும்.

எமது பிரதேச சிறுவர்கள் 90 பேர் வகையில் அல்-குர்ஆன் அருளப்பட்ட புனித மாதத்தில் குர்ஆனை ஓதுவதற்கு ஒன்றுசேர்ந்ததை பெரிதும் பாராட்டுகிறேன் என அதிபர் மௌலவி எஸ்.எச்.எம் இம்ரான் (ஹுமைதி) இதன்போது குறிப்பிட்டார். இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பள்ளி நிர்வாகிகள், மத்ரஸா பராமரிப்புக் குழு உறுப்பினர்கள், பெற்றோர்களை பெரிதும் பாராட்டுவதாகவும் பிரதேச பரோபகாரிகளினால் வழங்கும் இந்த அன்பளிப்பு புனித அல்குர்ஆனை கண்ணியப்படுத்துவதாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# உயர்பதவிகள் சிலவற்றுக்கு நாடாளுமன்றக் குழு அனுமதி

இரு அமைச்சுகளின் செயலாளர்கள், இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஒருவர் மற்றும் 3 வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு கடந்தவாரம் நாடாளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் இடம்பெற்ற நாடாளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் இந்த அனுமதி வழங்கப்பட்டது.

தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜயந்த மைக்கல் டி சில்வா, கமத்தொழில் அமைச்சின் செயலாளர் டி.எம்.ஐ.பண்டாரநாயக்க மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) டபிள்யு. பி.பி.பெர்னாண்டோ ஆகியோருக்கு இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கொரியக் குடியரசுக்கான இலங்கையின் புதிய தூதுவராக திருமதி சாவித்ரி ஐ.பானபொக்கவை நியமிப்பதற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்கு நாடாளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியது. அதற்கு மேலதிகமாக, ஓமான் இராச்சியத்துக்கான புதிய இலங்கைத் தூதுவராக அஹமட் லெப்பே சபருல்லாஹ் கானை நியமிப்பதற்கும் துருக்கி குடியரசுக்கான புதிய இலங்கை தூதுவராக திருமதி எஸ்.எச்.யு.திசாநாயக்கவை நியமிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டதாக தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, தர்மலிங்கம் சித்தார்த்தன், வைத்திய கலாநிதி சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே ஆகியோர் கலந்துகொண்டனர்.

# எரிவாயு பெற்றுத்தருமாறு கோரி ஆமர் வீதியில் மக்கள் ஆர்ப்பாட்டம்





எரிவாயு பெற்றுக்கொள்வதற்காக ஆமர் வீதியில் நீண்ட வரிசையில் காத்திருந்த பொதுமக்கள் நேற்று முன்தினமும் நேற்றும் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எரிவாயு சிலிண்டர்களை வீதிக்கு நடுவே வைத்து போராட்டம் செய்ததால் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. இவ்வாறு வரிசைகளில் நின்று ஆத்திரமடைந்த மக்கள் நடத்திய போராட்டத்துக்கு ஆதரவாக அப்பகுதி மக்களும் வீதிக்கு இறங்கி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை உடனடியாக பதவி விலகுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர். (படங்கள்:- ஏ.எஸ்.எம். ஜாவித்)

# அன்னையர் தினத்தில் அரசாங்கத்திற்கு எதிராக டிக்கோயாவில் பதாகைகளை ஏந்தி போராட்டம்







(க.கிஷாந்தன்)

சர்வதேச அன்னையர் தினம் இன்றாகும். இந்த சர்வதேச அன்னையர் தினத்தையொட்டி நாட்டில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. மலையகப் பகுதிகளிலும் சர்வதேச அன்னையர் தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் நேற்று (08) நடைபெற்றன.

அன்னையர்களை கௌரவிக்கும் முகமாக பிரிடோ நிறுவனம் ஒழுங்குசெய்திருந்த சர்வதேச அன்னையர் தினம் வெளிநாட்டு செலவாணியை பெற்றுக்கொடுக்கும் அன்னையர்களுக்கு உரிமையை வழங்கு எனும் தொனிப்பொருளில் டிக்கோயா நகர மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

இதில் அன்னையர்கள் மகிழ்வுறும் வகையில் அவர்களின் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், அந்நியச் செலவாணியை பெற்றுத்தரும் அன்னையரின் பாதுகாப்பை உறுதிசெய், தாய்மார்களின் உரிமைகளை அரசு உறுதிசெய்ய வேண்டும். குடும்ப வலுத்திட்டத்தை நடைமுறைப்படுத்து போன்ற வாசகம் எழுதிய சுலோக அட்டைகளை கையில் ஏந்தியவாறு கோஷமிட்டனர்.

# இ.தொ.கா. எம்.பியின் இரட்டை வேடம்

(நமது புலனாய்வு செய்தியாளர்)

அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ள நிலையில், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் தொடர்ந்தும் அரசாங்கத்தின் சொகுசு வாகனத்தை பயன்படுத்திவருவதாக நம்பகமாக அறியமுடிந்தது.

அரசாங்கத்துக்கு வழங்கும் ஆதரவை வாபஸ் பெறுவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்கனவே அறிவித்ததுடன், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து ஜீவன் தொண்டமான் இராஜினாமா செய்திருந்தார்.

அத்துடன், அரசுக்கு எதிராக கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மலையகப் பகுதிகளிலும் இ.தொ.கா. ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிலையில், அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அரசாங்கத்தின் சொகுசு வாகனத்தை கையளிக்கவில்லையென்பது தெரியவந்தது. தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சராக தற்போது பதவிவகிக்கும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அ.அரவிந்த குமாரின் அனுமதியின்பேரிலேயே ம.ராமேஸ்வரன் எம்.பி. குறித்த சொகுசு வாகனத்தைப் பயன்படுத்தி வருவதாக அறியமுடிந்தது.

# தொழிலாளர்களுக்கு குளவிக்கொட்டு; 9 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு

(மஸ்கெலியா நிருபர்)

பொகவந்தலாவ மோரா மேல் பிரிவு தோட்டத்தில் தேயிலை மலையில் தேயிலை கொழுந்து பறித்துக்கொண்டிருந்த 9 பெண் தொழிலாளர்கள் குளவிக்கொட்டுக்குள்ளாகி பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் (07) காலை 8.30 மணியளவில் இடம்பெற்றதாக காயங்களுக்குள்ளான தொழிலாளர்கள் தெரிவித்தனர். மரம் ஒன்றில் இருந்த குளவிக்கூடு கலைந்து தொழிலாளர்களை தாக்கியுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

காயங்களுக்குள்ளான ஒன்பது பெண் தொழிலாளர்களும் பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாக வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# ஹாலிஎல பொது விளையாட்டு மைதானம் ஆர்ப்பாட்டக்காரர்களால் திறந்துவைப்பு





(த.அசோக் குமார்)

அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் எதிர்ப்புத் தெரிவித்தும், பொருட்களின் விலை உயர்வைக் குறைக்கக் கோரியும் நாடளாவிய ரீதியில் போராட்டங்களில் ஈடுபட்டுவரும் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் ஹாலிஎல நகரின் மத்தியில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று (08) திறந்துவைத்துள்ளனர்.

பொதுமக்களின் வரிப்பணத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சொத்தாக இந்த மைதானம் திறக்கப்படுவதாகவும், பணத்தை விரயம் செய்யாமல் பொதுமக்கள் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் திறக்கப்படுவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். மைதானம் திறந்ததும், உள்ளூர் மக்கள், இளைஞர்கள் என ஏராளமானோர் மைதானத்தில் விளையாடினர்.

# சேதனப் பசளை விநியோகத்துக்கு ஒருவார காலக்கெடு! இல்லையேல் கொடுப்பனவுகள் நிறுத்தப்படும்

## நிறுவனங்களுக்கு கண்டி மாவட்ட செயலாளர் எச்சரிக்கை

(கண்டி நிருபர்)

இயற்கை பசளையை விநியோகிப்பது தொடர்பான நடவடிக்கைகளை அடுத்த வார இறுதிக்குள் முடிக்கவேண்டும் எனவும் அவ்வாறு முடிக்காத பட்சத்தில் தொடர்புடைய விநியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் நிறுத்தப்படும் எனவும் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தெரிவித்தார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

கண்டி மாவட்டத்திலுள்ள 45 கமநலசேவை நிலையங்களுக்கும் காபன் பசளைகளை வழங்குவதற்கு மூன்று தனியார் நிறுவனங்கள் அரசுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன.

இதற்கிணங்க, 5 ஆயிரத்து மெற்றிக்தொன் சேதனப் பசளை கண்டி மாவட்டத்தில் விநியோகிக்கப் படவுள்ளது. ஒப்பந்தம் செய்துகொண்ட தனியார் நிறுவனங்கள் முறையாக பொதி செய்து கமநல சேவை நிலையங்களின் களஞ்சியசாலைகளுக்கு விநியோகிக்க வேண்டும். உடன்படிக்கைக்கு இணங்காத பட்சத்தில் அவர்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்த வேண்டாம் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாவட்ட செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.



பசுமையாக்கள் விவசாயத்திட்டத்தின் கீழ் காபன் உரம் பயன்படுத்துவது புது அனுபவமல்ல எனவும் அவர் தெரிவித்தார். அரச அதிகாரிகள், விவசாயிகள், விவசாய அமைப்புப் பிரதிநிதிகள் என அனைத்துத் தரப்பினரும் அதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பருவகாலத்திற்கான விவசாயிகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய உரிய உரங்களை உரிய காலத்தில் கமநல சேவை நிலையங்களுக்கு வழங்கி குறித்த திகதியில் நீர் திறந்துவிடப்பட்டு பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

# சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் தொழிலாளர்களுக்கு பாதிப்பாக அமையக்கூடாது

## இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்கம் வலியுறுத்து

(கண்டி நிருபர்)

பெருந்தோட்டத்துறைத் தொழிலாளர்கள் உட்பட நாட்டிலுள்ள ஏனைய தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் சர்வதேச நாணய நிதியம் ஏதேனும் நிபந்தனைகளை முன்வைத்தால் அதனை ஏற்றுக்கொள்ளக்கூடாதென இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது தொடர்பாக மேற்படி அமைப்பு நேற்றுமுன்தினம் (07) கண்டியில் நடத்திய ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தது.

இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்கத்தின் செயலாளர் ஆனந்தி சிவசுப்ரமணியம் இதுபற்றி மேலும் கூறுகையில் -

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சர்வதே நாணய நிதியம் (ஐ.எம்.எவ்.) மட்டும்தான் தீர்வு என்ற நிலைப்பாட்டை மாற்றி வேறு மாற்றுவழிகளையும் பற்றி சிந்திக்க முடியும். ஏனெனில், எப்போதும் ஒரு நிறுவனம் கடன் அல்லது உதவிகள் வழங்கும் போது நிபந்தனைகளை விதிப்பதுண்டு. அந்த அடிப்படையில் சர்வதேச நாணய நிதியமும் நிபந்தனைகளை விதிப்பது சாதாரண விடயம். அது தொழிலாளர் வர்க்கத்தை பாதிக்கும் வகையில் அமையக் கூடாது. அப்படி தொழிலாளர்களை பாதிக்கும் வகையில் நிபந்தனைகள் விதிக்கப்படின் அவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடாது. மாறாக அத்தகைய நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டால் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாட வேண்டும்.



கடந்த கால அனுபவங்களைப் பொறுத்தவரை சர்வதேச நாணய நிதியம் அவ்வாறு நிபந்தனைகள் விதிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் இல்லாமல் இல்லை.

அதேநேரம் நாட்டில் தற்போதைய கொந்தளிப்பிற்கு ஆட்சிமாற்றம் ஒன்று தேவை என்பதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். அது தொழிலாளர் உரிமைகளை பாதுகாக்கும் ஒரு ஆட்சிமாற்றமாகவும் இருக்கவேண்டும்.

ஒரு நாட்டை நிர்வகிக்க வரிகள் தேவை. அதற்காக செல்வந்தர்களிடம் வரி விதிப்பது தவறில்லை. அதற்காக மறைமுக வரிகளைக் கொண்டுவந்து சாதாரண பொதுமக்களையோ தொழிலாளர்களையோ பாதிக்கும் வகையில் அது அமையக்கூடாது. அத்தியாவசிய தேவைகளான உணவு, மருந்துப் பொருட்கள் இறக்குமதி மற்றும் சுகாதார வசதிகள் என்பன அவசியமானவை. அப்படியானவற்றுக்கு விலக்களிக்கும் நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டாலும் ஏற்பது பொருத்தமாகாது. தொழிலாளர்கள் மீது அடக்குமுறையை ஏற்படுத்தும் எந்த நிபந்தனையும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடாது - என்றார்.

# மஸ்கெலியாவில் ஆலயம் உடைப்பு; தங்க நகை – உண்டியல் கொள்ளை







விசாரணைகளை மஸ்கெலிய பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிலுள்ள சாமிமலை மல்லியப்பூ தோட்ட முத்துமாரி அம்மன் ஆலயத்தை உடைத்து நேற்றுமுன்தினம் 7ஆம் திகதி இரவு தங்க நகை மற்றும் உண்டியல் திருடியதாக நேற்று 8ஆம் திகதி காலை மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். இதன் போது, அம்மன் சிலையில் போடப்பட்டிருந்தது தாலியுடன் தங்கச் சங்கிலி, 4 அரை பவுன் உள்ளிட்ட தங்க ஆபரணங்கள் மற்றும் உண்டியல் காணாமல் போயுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

உண்டியல் பெட்டியை உடைத்து பணத்தை எடுத்துவிட்டு, ஆலயத்திற்கு அருகில் வீசி எறிந்துள்ளதுடன், இது தொடர்பான மேலதிக

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# போராட்டங்களுக்கு வலுசேர்க்க நுவரெலியாவிலும் ஆர்ப்பாட்டம்







(க.கிஷாந்தன்)

அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு வலுசேர்க்கும் முகமாக நுவரெலியாவிலும் பாரிய போராட்டமொன்று நடைப்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நுவரெலியா நகரத்தில் வர்த்தக நிலையங்களை மூடி வர்த்தகர்கள் ஆதரவு தெரிவித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலைய கடைகள் மூடப்பட்டு மரக்கறிகள் கொள்வனவு செய்யப்படவில்லை.

இதேவேளை, இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் மதகுருமார்கள், நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை உதவியாளர்கள், தபால் ஊழியர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், விவசாயிகள் உட்பட அரச திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்தும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர்கள் அனைவரும் உடனடியாக அரசாங்கத்தைவிட்டு விலக வேண்டும் எனவும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பதாகைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும், போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நுவரெலியா நகரத்தில் பேரணியாகச் சென்ற இவர்கள் நுவரெலியா பிரதான தபாலகத்திற்கு முன்பாக ஒன்றுசேர்ந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# வீதிக்கு இறங்கிய கொட்டகலை மக்கள் புல் - புண்ணாக்கு வைத்து போராட்டம்









(க.கிஷாந்தன்)

கொட்டகலை டிரேட்டன் தோட்டத்தின் கே.ஓ. பிரிவு தோட்டத் தொழிலாளர்களும் ப்ரோடெக்ட் சங்கத்தின் பெண்கள் அமைப்பும் இணைந்து கொட்டகலை ரொசிட்டா நகரில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை கடந்த 6ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்தனர்.

பதாகைகளையும் கறுப்புக் கொடிகளையும் ஏந்தி கோஷம் எழுப்பி அரசுக்கான தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினை காரணமாக எதிர்காலத்தில் புல் மற்றும் புண்ணாக்கை தமது உணவாக எடுக்கும் நிலை உருவாகியுள்ளதாக தெரிவித்தனர்.

நாடாளுமன்றித்தில் நடத்தப்பட்ட பிரதி சபாநாயகர் தெரிவின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு சார்பாக இருந்தமை கண்டிக்கதக்கது. எல்லோரும் சேர்ந்து நாடகம் ஆடுகின்றனர் என்று தெரிவித்தனர். இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகளும் இணைந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பின்லாந்தின் தெற்காசியாவிற்கான தூதுவர் – யாழ். மாநகர முதல்வருக்கிடையில் கலந்துரையாடல்



(யாழ். நிருபர்)

பின்லாந்தின் தெற்காசியாவிற்கான தூதுவர் ஹன்னு ரிப்பட்டினுக்கும் மாநகர முதல்வர் மணிவண்ணனுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது யாழ். மாநகர முதல்வர், இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடந்தேறிய இனப்படுகொலைக்கு நீதியான தீர்வொன்றை பெற்றுத்தருவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை களையும் மேற்கொள்ள வேண்டும்.இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கு உதவ முன்வருகின்ற நாடுகள் மற்றும் அமைப்புகள் தமிழர்களின் உரிமைசார் பிரச்சினைகளுக்கு நீதியை பெற்றுத்தரும் வகையில் அழுத்தங்களை கொடுத்து இலங்கையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றை பெற்றுக் கொடுப்போமென்று இலங்கை அரசு உறுதியளிக்கும் பட்சத்தில் மட்டுமே இலங்கைக்கான நிதியுதவி மற்றும் ஜிஎஸ்டி வரிச்சலுகை ஆகியவற்றை வழங்க வேண்டும்.

அத்துடன், அழிவுற்ற எங்களுடைய மக்களின் பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் கட்டியெழுப்ப உதவ வேண்டும் - கேட்டுக் கொண்டார்.இது தொடர்பில் கருத்து தெரிவித்த பின்லாந்தின் தெற்காசியாவுக்கான தூதுவர்,

இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பில் நாங்கள் தொடர்ந்தும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுப்போம். தற்போதுதான் புதிதாக இப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருப்பதால் தங்களின் மூலம் பல விடயங்களை அறிந்துகொண்டி ருக்கின்றோம். இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை களை மேற்கொள்வேன் என்றும் உறுதியளித்தார்.

ஹன்னு ரிப்பட்டி பின்லாந்தின் தெற்காசியா விற்கான தூதுவராக பதவியேற்று ஐந்து நாட் கள் மட்டுமே கடந்துள்ள நிலையில், அவர் சந்தித்த முதல் ஆசிய நாடுகளுடனான சந்திப்பாகவும் இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிகளுடனான முதல் சந்திப்பாகவும் இச்சந்திப்பு அமைந்திருந்தது.

# மருத்துவ பேரிடருக்குள் சிக்கவுள்ள யாழ். போதனா



(யாழ். நிருபர்)

யாழ். போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துப்பொருட்களுக்கு பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதுடன், இது ஓர் மருத்துவப் பேரிடரைக் கட்டியம் கூறியுள்ளது - என யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளரும் மருத்துவருமான சி.யமுனாநந்தா தெரிவித்தார். அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும் அந்த அறிக்கையில்,

சத்திரசிகிச்சைக்குத் தேவையான மருந்துகள் பல பற்றாக்குறையாகக் காணப்படுகின்றன. இதனால் அவசர சத்திரசிகிச்சை, கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சத்திரசிகிச்சை தவிர்ந்த ஏனைய சத்திரசிகிச்சைகள் செய்யமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

மயக்கமருந்துகள், சேலைன், சத்திரசிகிச்சையில் அதிகமாகத் தேவைப்படும் பெட்டடின் உட்பட பல மருந்துகள் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே உபயோகிக்கக்கூடியதாக உள்ளன. புற்றுநோய்களுக்கான சிகிச்சை உட்பட பல சத்திர சிகிச்சைகள் மேற் கொள்ளமுடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் பொதுமக்களை விழிப்படைய வைத்தல் அவசியம் தேவை. விபத்துகள், குழு மோதல்கள், கேளிக்கை நிகழ்வுகளைத் தவிர்த்து தற்போதைய சூழலை எதிர்கொள்ள அனைவரும் உதவுதல் வேண்டும். மேலும் வைத்தியசாலைச் சமூகம் மருத்துவ சேவையைத் தொடர மனிதநேய மருத்துவ அவசர உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது - என்றுள்ளது.

# அவசரகாலச் சட்டம் பொருளாதாரத்தை மோசமான நிலைக்குக் கொண்டுசெல்லும்

## கஜேந்திரகுமார் எம்.பி.



(யாழ். நிருபர்)

அவசரகாலச் சட்டம் போன்ற நடவடிக்கைகள் தற்போதைய பொருளாதாரத்தை மிக மோசமான நிலைக்குக் கொண்டுசெல்லும் நடவடிக்கையையே ஏற்படுத்தும் - என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டமை தொடர்பாக அண்மையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தி கடந்த மூன்று மாதங்களில் இரண்டாவது தடவையாக அமுல்படுத்தியுள்ளது. மக்கள் முழுமையாக அரசாங்கத்தை எதிர்க்கும் நிலைக்கு வந்திருக்கின்ற வேளையில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்துவிடாமல் அனைத்து மாவட்டங்களிலும் பரவவிடாமல் நெருக்கடியை ஏற்படுத்தவும் தற்போதுள்ள நிலையில் அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ளது.

தேர்தலொன்று நடைபெற்றால் கிட்டத்தட்ட 30 ஆசனங்களை மட்டுமே பெறக்கூடிய நிலையிலேயே மிக மோசமாக அரசாங்கம் பலமிழந்து போய்விட்டது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னதாக நிதி அமைச்சு சார்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டது. இந்த பேச்சுவார்த்தையில் சர்வதேச நாணய நிதியம் உதவி செய்வதாக இருந்தால் அதற்கு அரசு ஸ்திரத்தன்மையுடன் இருக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.அரசை ஆளும் அரசாங்கம் ஸ்திரத்தன்மை உடையதாக இருக்கவேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் பொருளாதாரத்தை மிக மோசமான நிலைக்கு கொண்டுசெல்லும் நடவடிக்கையை ஏற்படுத்தும் - என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# சுன்னாகத்தில் வீடொன்றுக்கு மின் துண்டிப்பு; மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ். நிருபர்)

எந்தவிதமான முன்னறிவித்தலுமின்றி, காரணங்கள் எதுவுமின்றி தமது வீட்டுக்கான மின்சாரத்ஜ் மின்சார சபையின் சுன்னாக கிளையினர் துண்டித்துள்ளதாக குடும்பஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியிலுள்ள வீடொன்றின் மின்சாரத்தை கடந்த புதன்கிழமை மின்சார சபையினர் துண்டித்துள்ளனர். அது தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த குடும்பஸ்தர் மேலும் தெரிவிக்கையில்,

மருத்துவ தேவைக்காக எம்முடைய வீட்டை ஒருவரிடம் பொறுப்பாக வைத்து , அவரிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டோம். எங்களின் வீட்டை பொறுப்பாக வாங்கிக்கொண்டு பணத்தைக் கொடுத்த நபர், தற்போது எங்களிடமிருந்து பணத்தை வாங்காது வீட்டை முழுமையாக கையகப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார். இந்நிலையில், கடந்த சில வாரங்களுக்கு முன்னர் எமது வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த கும்பல் ஒன்று எம்மை மிரட்டி எமது வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை அடித்துடைத்துவிட்டுச் சென்றிருந்தனர்.

அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் வழங்கியிருந்தோம். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. பொலிஸாரிடம் வினவியபோது, விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக கூறி வருகின்றனர். எமக்கு அவர்களால் அச்சுறுத்தல்கள் இருப்பதனால் எமது வீட்டுக்கு பாதுகாப்பு கெமராக்களை தற்போது பொருத்தியுள்ளோம். இந்த நிலையிலையே கடந்த புதன்கிழமை மின்சார சபையினரால் எமது வீட்டுக்கான மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் மின்சார சபையினரிடம் கேட்டபோது, எமக்கு பணம் தந்தவர் தனது பொறுப்பிலேயே வீடு உள்ளதாகவும், அந்த வீட்டிற்கு மின் இணைப்பு தேவையில்லை என கூறியதால் தாம் மின் இணைப்பை துண்டித்ததாகவும் எமக்கு கூறினார்கள்.

ஆனால், இன்றுவரை எமது பெயரிலேயே மின் பட்டியல் வழங்கப்படுகிறது. அவ்வாறு இருக்கும்போது, எம்மிடம் அது தொடர்பில் கேட்காது எவ்வாறு மின்சாரத்தை துண்டித்தீர்கள் என கேட்டதற்கு பதில் அளிக்காமல் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஊடாக எம்மை வெளியில் அனுப்பினார்கள்.

தற்போது எமது வீட்டுக்கு மின்சாரம் இல்லாமையால், குழந்தையுடன் வாழும் நாம் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளோம் – என்றார்.

அதேவேளை எமது பாதுகாப்புக்காக பொருத்திய பாதுகாப்பு கெமராக்கள் மின்சாரம் இல்லாமையால், செயற்படாமல் உள்ளது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எமது குடும்பத்தினருக்கு ஏதேனும் ஆபத்து விளைவிக்கக்கூடும் என அச்சமும் தெரிவித்தார்.

# இளைஞர் - யுவதிகளுக்கான விசேட செயலமர்வு







(மன்னார் நகர் நிருபர்)

இளைஞர், யுவதிகளுக்கு இடையே சமூக ஒத்திசைவை பலப்படுத்தல் எனும் தொனிப்பொருளில் ரஹமா நிறுவனத்தின் அனுசரணையில் வாழ்வுக்கான தன்னார்வ தொண்டர் அமைப்பின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்திலுள்ள இளைஞர், யுவதிகளை ஒன்றிணைத்து ஏற்பாடுசெய்யப்பட்ட விசேட செயலமர்வு மற்றும் தலைமைத்துவப் பயிற்சி ஓய்வுபெற்ற ஆசிரியர் லயன் ரெஜினா இராமலிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் ஜேக்கா மண்டபத்தில் இடம்பெற்றது

மாவட்ட ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட இளைஞர், யுவதிகளின் ஆளுமையை வெளிப்படுத்தவும் இன, மத , மொழி, கலாசார பிரிவினை இன்றி அனைவரும் சமூக ஒத்திசைவுடன் சமூகத்தையும் நாட்டையும் கட்டியெழுப்புவதற்கான நடைமுறைகளை உருவாக்கும் முகமாகவும் குறித்த செயற்றிட்டம் ஒழுங்கமைக்கப்பட்டு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டி மேல் ரஹமா நிறுவனப் பணிப்பாளர் மரிக்கார், ரஹமா நிறுவன அதிகாரிகள், லியோ இளைஞர் கழக உறுப்பினர்கள் மற்றும் கிராம ரீதியிலான இளைஞர் கழக அங்கத்தவர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் பொலிஸ் காவலரண் திறந்துவைப்பு





(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (07) காலை சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்று திறந்துவைக்கப்பட்டது.

வர்த்தக சங்கத் தலைவர் வே.சிவநிதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த லியனகே மற்றும் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உஜித்த லியனகே ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டு பொலிஸ் காவலரணை திறந்துவைத்திருந்தனர்.

மேலும் நிகழ்வில் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன், சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன, சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் பால மயூரன், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சாவகச்சேரி பொலிஸார் கேட்டுக்கொண்டதற் கிணங்க சாவகச்சேரி ஸ்ரார் ஹோட்டல் மற்றும் லக்சுமி ஹாட்வெயார் உரிமையாளர்களின் நிதி அனுசரணையில் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த நகர பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த காவலரணில் 24 மணிநேரமும் பொலிஸார் கடமையில் இருப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கொடிகாமத்தில் குடிமனைக்கு அருகாமையில் தவறணை

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் குடிமனை களை அண்மித்து கள்ளுத் தவறணை அமைக்கும் செயற்பாட்டைக் கண்டித்து நேற்று (08) பிரதேச மக்கள் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.இது தொடர்பாக பிரதேச மக்கள் கருத்து தெரிவிக்கையில்;

கண்டி வீதி கொடிகாமம் என்ற முகவரியில் அமையவேண்டிய தவறணையை தற்காலிக தவறணையாக பருத்தித்துறை வீதி கொடிகாமத் திலுள்ளதனியார் காணியொன்றில் 5 வருடஒப்பந்தத் தில் கடந்த 2017ஆம் ஆண்டு அமைத்திருந்தனர். 5 வருடங்களின் பின்னர் குறித்த இடத்திலிருந்து தவறணை அகற்றப்படும் என நம்பியிருந்த நிலையில், தற்போது மீளவும் 10 வருடங்கள் தவறணையை குறித்த காணியில் நடத்த காணி உரிமையாளருடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டிருப்பதுடன், நிரந்தர கட்டடம் அமைக்கும் செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குடிமனைக்குள் நிரந்தர தவறணை அமைவதனை விரும்பாத பிரதேச மக்கள் தென்மராட்சி பிரதேச செயலகம், சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்கு இவ்விடயம் தொடர்பாக தெரியப்படுத்தியதுடன், எதிர்ப்பு நடவடிக்கையையும் முன்னெடுத்திருந்தோம்.

எமது பகுதியில் அரசாங்க உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் உள்ள நிலையில் இவ்விடத்தில் கள்ளுத் தவறணை அமைவதனை ஏற்றுக்கொள்ள முடியாதென மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

தவறணை அமைப்பது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபையில் எந்தவிதமான அனுமதியும் பெறப்படவில்லை என பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

# கிணற்றுக்குள் தவறி விழுந்து சிறுமியொருவர் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேலணை சரவணை பகுதியில் கிணற்றுக்குள் தவறி விழுந்து சிறுமியொருவர் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

ரூபன் மதுசிகா ( வயது -11 ) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார். சிறுமி கிணற்றுக்குள் இருந்து மீட்கப்பட்டு ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும் சிறுமி ஏற்கனவே நீரில் மூழ்கி உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# கிளிநொச்சி செல்வாநகர் ஐயப்பன் ஆலயத்திற்குள் சடலமொன்று மீட்பு



(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி செல்வாநகர் கிராமத்திலுள்ள ஐயப்பன் ஆலயத்திற்குள் சடலமொன்று நேற்று முன்தினம் காலை பொதுமக்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

43 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை யான லாலசிங்கம் என்ற வர்த்தகரே சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார். பொலிஸ் மற்றும் நீதிமன்ற நடவடிக்கை யின் பின்னர் சடலம் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலைக் கொண்டுசெல்லப்படவுள்ளது. கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின் றனர்.


திகதி 07.05.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 4755
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.9,445,550.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 7 2 9 1 2 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.21,313,582.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1243
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,897,040.00
வெற்றி இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 9 2 1 8 7 0
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ.11,193,113.20

திகதி 06.05.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4754
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.1,831,340.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 3 3 3 1 8 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.20,733,332.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 784
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 541,900.00
வெற்றி இலக்கினம் X வெற்றி இலக்கங்கள் 08 43 75 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,787,660.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 785
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,486,620.00
வெற்றி இலக்கினம் G வெற்றி இலக்கங்கள் 06 09 24 45
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,009,718.40

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0063
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.1,043,840.00
இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 01 48 52 53
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,226,656.20

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0064
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,902,480.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 10 21 27 35
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,226,656.20

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1102
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 831,060.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.250,862,770.00
M 18 10 26 33 34
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1103
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,326,300.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.250,949,530.00
A 26 23 27 59 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk

தமிழன்
www.thamilan.lk

# வணிக உலகம்
## Business world

## அடிப்படைகளுக்கப்பால் செல்லுதல்; AI இனால் இயக்கப்படும் துணைக்கருவிகளாக மாறியுள்ள ஸ்மார்ட்போன்கள்




ஸ்மார்ட்போன்கள் மாறிவரும் நுகர்வோர் கண்ணோட்டத்துக்கு ஏற்றவிதமாக காலவோட்டத்தில் வேகமாக முன்னேறி இன்று நம் கைகளில் எடுத்துச்செல்லும் பல்பயன்பாட்டு சாதனங்களாக பரிணமித்துள்ளன. போன்கள் பொக்கெட்டில் அல்லது பணப்பையில் எடுத்துச்செல்ல முடியாத அளவுக்குப் பெரியதாக உருவாக்கப்பட்ட காலங்கள் அல்லது இந்த பெரிய சாதனத்தால் குறைந்த தரமான படங்களை மட்டுமே எடுக்க முடிந்தமை நினைவிருக்கிறதா? முற்காலத்தில் மொபைல் போன்களின் ஒரே நோக்கம் பயணத்தின்போது மற்றவர்களுடன் பேசுவதாகும். மேலும், நாள்முழுவதும் பாவனையாளர்களுக்கு அவர்களின் பெரும்பாலான பணிகளுக்கு உதவுவதற்கும் பெரிய பற்றரிகளை கொண்டிருந்தன. விரைவில் படங்களைக் கிளிக் செய்யும் திறன் மற்றும் பிற வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அப்போதிருந்து ஸ்மார்ட்போன் பாவனையாளர்கள் ஒருபோதும் ஒரு ஸ்மார்ட்போன் வாங்கும்போது அவர்கள் விரும்பும் மற்றும் தேவைப்படுவதில் சமரசம் செய்து கொள்ளவில்லை.

ஸ்மார்ட் கெமராக்களின் அறிமுகத்திற்கு பின்னர் தொழில்சார்-தரமான படங்களை இப்போது பொக்கெட் அளவிலான சாதனங்களில் பிடிக்க முடிகின்றது. AI மூலம் இயங்கும் ஸ்மார்ட் அம்சங்கள் ஸ்மார்ட் போன்கள் சுற்றுச்சூழலை துல்லியமாக அடையாளம் காணவும் இரைச்சலை நீக்குதல், ஒளியை சரிசெய்தல், பொருளைக் கூர்மைப்படுத்துதல் மற்றும் பிரேமிலுள்ள தேவையற்ற அல்லது மங்கலான கூறுகளை அகற்றுவதன் மூலம் தானாகவே புகைப்படங்களை மேம்படுத்தவும் உதவுகிறது. ஸ்மார்ட்போன் பின்னணியை பகுப்பாய்வு செய்து அடையாளம் காணவும் நபர்களையும் பொருட்களையும் அடையாளம் காண செயற்கை நுண்ணறிவு வழிமுறையைப் பயன்படுத்துகிறது.

## மஹிந்திரா ஐடியல் / பினான்ஸ் குளியாப்பிட்டியில் 20ஆவது கிளையை திறந்துவைத்து தனது வலையமைப்பை மேலும் விஸ்தரித்துள்ளது

முதன்மையான, உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களில் ஒன்றான மஹிந்திரா ஐடியல்/பினான்ஸ், கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புற நுகர்வோரை மையமாகக்கொண்டு இயங்கிவருவதுடன், அதன் நாடுதழுவிய வலையமைப்பு விஸ்தரிப்பின் கீழ் இலங்கையில் தனது 20ஆவது கிளையை அண்மையில் குளியாப்பிட்டியில் திறந்துவைத்துள்ளது.

வடமேல் மாகாணத்திலுள்ள கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புற மக்களுக்கான ஒரு முக்கியமான வணிக மையமான குளியாப்பிட்டியில் அமைந்துள்ள இந்த புதிய கிளையானது, நாடு முழுவதும் மஹிந்திரா ஐடியல் / பினான்ஸின் வளர்ந்துவரும் பிரசன்னத்தை வலுப்படுத்தும் அதேநேரத்தில் வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் சௌகரியத்தையும், பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது.

மஹிந்திரா ஐடியல் /பினான்ஸ் வலையமைப்பில் சேர்க்கப்படும் 20ஆவது கிளையைக் குறிக்கும் வகையில், இடம்பெற்ற விசேட திறப்பு விழா நிகழ்வின் மத்தியில் புதிய குளியாப்பிட்டி கிளை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளர்கள், பல்வேறு பிரமுகர்கள் மற்றும் மஹிந்திரா ஐடியல்/பினான்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ அணியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இவ்விழாவில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

இலக்கம் 26,மாதம்பே வீதி, குளியாப்பிட்டி என்ற முகவரியில் இப்புதிய கிளை அமைந்துள்ளது.




## FCC வங்கி மற்றும் யுஎஸ்எயிட் (USAID) கூட்டாக இணைந்து பெண் தலைமைத்துவ தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கின்றன



இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் எமது தேசத்தின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும். அவை 45% வரையான தொழில் வாய்ப்புகளை தோற்றுவிப்பதுடன், இலங்கையில் கிட்டத்தட்ட 75% வணிகங்களாக அவை காணப்படுகின்றன. அத்துடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52% வரையான பங்களிப்பையும் ஆற்றி வருகின்றன. எனினும், நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறையானது வங்கிகளிடமிருந்து கடன் வசதிகளைப் பெறும்போது அடிக்கடி சவால்களுக்கு முகங்கொடுக்கின்றன. இது பொதுவாக இந்த வணிகங்களுக்கு போதுமான நீண்டகால மற்றும் நம்பகமான செயற்பாட்டு சாதனைப் பதிவுகளை கட்டியெழுப்ப போதுமான நேரம் இல்லாததால், இத்துறையில், குறிப்பாக பெண்களுக்கு சொந்தமான மற்றும் அவர்களால் நிர்வகிக்கப்படுகின்ற நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மத்தியில் அவர்களின் செயல்பாடுகளில் குறைபாட்டிற்கு வழிவகுக்கிறது.

இந்த சவால்களைப் புரிந்துகொண்டு, இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறைக்கு உதவ முயல்வதன் மூலம், அனைவருக்கும் ஏற்ற வங்கியான DFCC வங்கி, பெண்களின் தலைமைத்துவத்துடனான நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு கடன் வசதிகளை வழங்குவதற்காக The Palladium Group ஆல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் USAID CATALYZE தனியார்துறை அபிவிருத்திச் செயற்பாட்டுடன் ஒரு முக்கிய கூட்டாண்மையை ஏற்படுத்தியுள்ளது. சமீபத்தில் இரு நிறுவனங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் மூலமாக இந்த கூட்டாண்மை உத்தியோகபூர்வமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## சதாஹரித நிறுவனம் SLIM NASCO விருதுகள் 2020/21 நிகழ்வில் பல தங்க மற்றும் வெள்ளி விருதுகளைத் தனதாக்கியுள்ளது



இலங்கையின் வர்த்தகரீதியான வனவியல் துறையில் முன்னணியில் திகழ்ந்து வருகின்ற சதாஹரித பிளான்டேஷன்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தைச் சேர்ந்த நான்கு சிறந்த தொழில் வல்லுநர்கள், இலங்கை சந்தைப்படுத்தல் கற்கை நிலையம் (SLIM) ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்ற 2020 தேசிய விற்பனை சமூக விருதுகள் 2020 நிகழ்வில் வெற்றி விருதுகளுடன் கௌரவிக்கப்பட்டுள்ளனர். இலங்கையின் முதன்மையான அகில்மர வர்த்தகநாமத்தை பிரதிநிதித்துவப்படுத்தும், சதாஹரிதவின் விற்பனை ஊழியர்களின் முன்மாதிரியான அங்கத்தவர்களுக்கு பாதகமான சந்தை நிலைமைகள் காணப்பட்ட போதிலும், கொவிட் தொற்றுநோய் காலகட்டத்தில் நிறுவனத்தின் இலக்குகளை அடையப் பெறுவதற்கான அவர்களின் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் வகையில், பல்வேறு பிரிவுகளில் நான்கு தனிப்பட்ட விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

## CBM Campus இன் பட்டமளிப்பு விழா BMICHஇல் கோலாகலமாக நிறைவு



IIC தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த ICBM Campusஇன் பட்டமளிப்பு விழா அண்மையில் BMICHஇல் வெகு விமரிசையாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக கலாநிதி அஜித் கொலொன்னே கலந்து கொண்ட அதேவேளை, கம்போடியாவின் IICUTஇன் தொழில்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான பேராசிரியரும் இலங்கையின் ICBM Campusஇன் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான பேராசிரியர் ரசிக அபொன்சு மற்றும் இதர சிரேஷ்ட அறிஞர்கள் பலரும் பங்கேற்ற இந்த பட்டமளிப்பு விழாவில் 60 பட்டதாரி மாணவர்கள் தமது பட்டப்படிப்பு சான்றிதழை பெற்றுக் கொண்டனர்.

## Miniso உற்பத்திகளுக்கான அதிகாரப்பூர்வ விற்பனை முகவராக அபான்ஸ் நிறுவனம் இணைந்துகொண்டது.




ஜப்பான் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படும் Miniso உற்பத்திகளுக்கான அதிகாரப்பூர்வ விற்பனை முகவராக அபான்ஸ் நிறுவனம் சமீபத்தில் இணைந்துகொண்டது. இதுவரை 5 Miniso காட்சியறைகளை அபான்ஸ் நிறுவனம் திறந்துவைத்துள்ளதோடு, அவை One Galle Face Mall, Colombo City Centre, Kandy City Centre, யூனியன் பிரதேசம், காலி வீதி, கொள்ளுப்பிட்டி ஆகிய இடங்களில் அவை அமைந்துள்ளன. எதிர்வரும் காலங்களில் பொரலஸ்கமுவ பிரதேசத்திலும் ஒரு Miniso காட்சியறை திறந்துவைக்கப்படவுள்ளது. மேலும், இதன் காட்சியறைகள் நாடளாவிய ரீதியில் திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையில் Miniso உற்பத்திகளை விரிவுபடுத்துவதற்கான அதிகாரப்பூர்வ முகவராகத் திகழும் அபான்ஸ் நிறுவனம் தற்போது துணை முகவர் நிறுவனங்களை இணைத்துக்கொள்ளும் பணியை மேற்கொண்டு வருகிறது. தற்போது Miniso வணிகமானது முன்னணி Online வணிக தளமாக இயங்கி வருவதன் காரணமாக ஜூலை மாதம் முதல் Miniso உற்பத்திகளை BuyAbans இணையம் மூலம் Online வாயிலாக சந்தைப்படுத்துவதற்கு அபான்ஸ் நிறுவனம் எதிர்பார்த்துள்ளது.

## மாணவ தூதுவர்கள் மற்றும் உறுப்பினர்களின் புத்தாக்கத்தைப் பாராட்டும் Samsung



இலங்கையின் No:1 brand ஆன Samsung, அவர்களின் முதன்மை தொடரான Samsung Galaxy S22ஐ அண்மையில் அறிமுகம் செய்தது. இந்நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடந்ததுடன், இதில் Samsung மாணவ தூதுவர்கள் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

Samsung மாணவ தூதுவர்கள் brandஇன் பிரதிநிதிகளான இவர்கள் நாடு முழுவதும் உள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களிலிருந்து வந்தவர்கள். Samsung மாணவர் தூதுவர் திட்டம் இலங்கையிலுள்ள இளம் மற்றும் திறமையான பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு அவர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கான ஓர் தளமாக உள்ளது. அவர்களில் சிறந்த புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த பயிற்சித் திட்டங்களுக்கு செல்லும் வாய்ப்பை பெற்றதுடன், பல தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களுக்கு வெளிப்படுத்தும் வாய்ப்பை பெற்றனர். இதேவேளை, இதில் கலந்துகொண்ட நிபுணத்துவ ஆலோசனை வழங்கும் நிபுணர் மட்ட உறுப்பினர்கள் Galaxy பாவனையாளர்களுக்கு அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் அவர்களுக்கு உதவும் அனுபவங்களை பகிர்ந்துகொண்டார்கள்.

## காப்புறுதித்துறையில் முதன்முறையாக வெற்றிகரமாக ஹேக்கத்தான் சவாலை நடத்தியுள்ள AIA இன்ஷூரன்ஸ்!

AIA இன்ஷூரன்ஸ் காப்புறுதித்துறையில் முதன்முறையாக 'AIA ஸ்ரீலங்கா ஹேக்கத்தான் சவால் 2021' இனை மிகவும் வெற்றிகரமாகவே நடத்தியிருந்தது. 'ஹேக்கத்தான் சவால் 2021' கடந்த வருடம் செப்டெம்பர் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இலங்கை மற்றும் சர்வதேச நிதியியல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் காப்புறுதித் தொழில்நுட்ப நிறுவனங்களின் மகத்தான வெற்றிக்கு இடமளிக்கும் வகையில் 2022 மார்ச் 09ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்தது. இந்த ஐந்து மாத கால நிகழ்வானது எட்டுக்கும் (08) மேற்பட்ட போட்டியாளர்களைக் கவர்ந்திருந்ததுடன், மிகவும் சிக்கலான வியாபாரச் செயல்முறைகளை இலகுபடுத்தும் இறுதியான இலக்குடன் நான்கு (04) முன்மாதிரித் தீர்வுகளும் இதன்போது பகிரப்பட்டிருந்தன.







ஹேக்கத்தான் நிகழ்வானது AIA இனால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டிருந்ததுடன், ASEAN நிதியியல் புத்தாக்க வலையமைப்பு (AFIN), சமூக விளைவு முயற்சியானது சிங்கப்பூர் நாணய ஆணையம் (MAS), சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC), ASEAN வங்கியாளர்கள் சங்கம் (ABA) ஆகியவற்றுடனான கூட்டாண்மையுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேலும் இந்த நிகழ்வானது நிதியியல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்புக்காக AFIN, உலகின் முதலாவது குறுக்கு எல்லை, திறந்த கட்டமைப்பு API சந்தை மற்றும் சாண்ட்பொக்ஸ் (Sandbox) தளம் ஆகியவற்றின் முயற்சியுடன் API பரிமாற்று (APIX) தளத்தில் நடத்தப்பட்டிருந்தது.

IFC உடன் இணைந்து APIX தளத்தில் ஹேக்கத்தான் சவாலை ஆரம்பிக்கும் இலங்கையின் முதலாவது நிறுவனமாக AIAயே திகழ்கின்றது.

## டுபாயில் 2022 கோடை காலத்துக்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கும் எமிரேட்ஸ் போர்டிங் பாஸ்



எமிரேட்ஸின் விமான போர்டிங் பாஸ் என்பது வெறுமனே ஒரு பயணப்பத்திரம் மட்டுமல்ல. அது டுபாயில் இவ்வாண்டு கோடை காலத்துக்கான பல்வேறு வாய்ப்புகளை வழங்கும் ஓர் ஆவணமும் கூட. மே மாதம் முதலாம் திகதி தொடங்கி செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதிவரையான ஐந்து மாத காலத்துக்கு எமிரேட்ஸ் அதன் வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கவுள்ளது. மை எமிரேட்ஸ் கோடை கால அனுமதிச்சீட்டுடன் டுபாய்க்குள் வருபவர்களுக்கு அல்லது தரித்துச் செல்பவர்களுக்கும் இந்த வாயப்பு வழங்கப்படுகிறது.

எமிரேட்ஸ் வாடிக்கையாளர்கள் தமது போர்டிங் பாஸைக் காட்டுவதன் மூலம் டுபாய் முழுவதும் உள்ள நூற்றுக்கணக்கான விற்பனை நிலையங்கள், ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு இடங்கள், உணவு உட்கொள்ளும் இடங்கள் என்பனவற்றில் கணிசமான கழிவுச் சலுகைகளை அனுபவிக்க முடியும

இது சம்பந்தமான முழு விவரங்களை www.emirates.com/myemiratespass என்ற இணையத்தில் பார்வையிடலாம்.

## ஏப்பிரல் மற்றும் மே மாதங்களில் அருணலு மற்றும் இசுறு புதிய கணக்குகளைத் திறப்பவர்களுக்கு வெகுமதிகளை வழங்கவுள்ள கொமர்ஷல் வங்கி



சிறுவர்களுக்கான புதிய அருணலு சேமிப்புக் கணக்குகளைத் திறக்கின்றவர்களுக்கு அல்லது இசுறு சேமிப்புத் திட்டங்களைத் திறக்கின்றவர்களுக்கு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வெகுமதிகள் வழங்கப்படவுள்ளதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது. கணக்கு வைத்திருப்பவர்கள் தமது சிறுபராயத்திலும் அதற்கு அப்பாலும் அனுபவிக்கும் நன்மைகளுக்கு மேலும் வலுவூட்டும் வகையில் இந்த வெகுமதிகள் அமையவுள்ளன.

சிறுவர்களுக்கான வங்கியின் பிரபல கணக்குகள் மீதான இந்த ஊக்குவிப்பு இந்த கணக்குகள் மீதான புதிய ஆர்வத்தை தூண்டும் வகையில் அமைந்துள்ளது. அத்தோடு பெற்றோர் தமது வாரிசுகளின் எதிர்காலத்துக்காக மேலும் சேமிப்பதை ஊக்குவிப்பதாகவும் இது அமையவுள்ளது.

## 4G வலையமைப்பை பலப்படுத்தும் k

airtel

3G டேட்டா சேவைகளை நிறுத்துவதன் மூலம் கூடுதல் LTE அலைவரிசை மற்றும் திறன்களுடன் தனது வலையமைப்பை மேம்படுத்துவதாக Airtel Lanka அறிவித்துள்ளது. இது Airtel Lankaவின் 4G/5G சேவைகளை மேம்படுத்தவும் அதிகரிக்கவும் வாய்ப்பளிக்கிறது. இது பாவனையாளர்களுக்கு வேகமான, நிலையான வலையமைப்பு அனுபவத்தை வழங்கும். இந்த முயற்சியானது டேட்டா வேகத்தை 50% வரை அதிகரிக்கும் என்பதோடு வலையமைப்பு நெரிசலை வெகுவாகக் குறைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

3G டேட்டா சேவைகள் ஜூன் 24, 2022 முதல் நிறுத்தப்படவுள்ளது. எனினும், எயார்டெல் நிறுவனமானது அதன் 2G வலையமைப்பு தொடர்ந்து செயல்படும் என்று மீண்டும் வலியுறுத்துகிறது. இதன் மூலம் 2G, 3G வாடிக்கையாளர்கள் உட்பட அனைத்து பயனர்களும் voice, text சேவைகளை தடையின்றி அணுகலாம்.

## ZTE Blade A71 - இலங்கையில் சிறந்த அனைத்து தொழில்நுட்ப சிறப்பம்சங்களையும்கொண்ட ஸ்மார்ட்/போன்




1985ஆம் ஆண்டுமுதல் தொலைத்தொடர்பாடல் துறையில் தலைசிறந்த சாதனையை நிலைநாட்டியுள்ள ZTE ஆனது 20 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை உட்பட உலகளாவிய தொலைத்தொடர்பாடல் வலையமைப்புகளை உருவாக்கவும், உதவவும் மற்றும் பேணிப் பராமரிக்கவும் உதவி வந்துள்ளது. இந்த விரிவான தொழில்துறை அனுபவம் மற்றும் அங்கீகாரத்தின் பக்கபலத்துடன், ZTE அதன் எடுப்பான, நேர்த்தியான மற்றும் அதிநவீன ZTE Blade வரிசை சாதனங்களுடன் இப்போது ஸ்மார்ட்/போன்களின் அரங்கில் காலடியெடுத்து வைத்துள்ளது. ஸ்மார்ட்/போன் சந்தையில் ஒரு புதிய வரவாக, ZTE Blade வரிசை நுகர்வோருக்கு குறிப்பாக, நடுத்தர வகுப்புப் பிரிவில் மற்ற பிரபலமான வர்த்தகநாமங்களைப்போலவே ஒப்பிடக்கூடிய தொழில்நுட்ப அம்சங்களையும் நம்பகத்தன்மையையும் அவற்றை விடவும் மிகக் குறைந்த விலையில் வழங்குகின்றது.

# காரைதீவு கடற்கரையில் சொறிமுட்டையில் அகப்பட்ட மீனவரொருவர் உயிரிழப்பு




(அம்பாறை நிருபர்)

மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர் பாரிய சொறிமுட்டையில் (ஜெலி) அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

அம்பாறை மாவட்டம், காரைதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரைப் பகுதியில் நேற்று (08) காலை 7 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், சொறிமுட்டைக்கடிக்கு உள்ளான மீனவர் சக மீனவர்களால் மீட்கப்பட்டு, காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வேளை ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்த மீனவர் மாயவலை மூலம் மீன் பிடிப்பதற்கு சக மீனவர்களுடன் இணைந்து மீன்பிடியில் ஈடுபட்ட பின்னர் கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் படகிலிருந்து கடலில் இறங்கி வலையை சரிசெய்ய முயற்சித்துள்ளார்.

இவ்வாறு வலையை சரிசெய்ய கடலுக்குள் இறங்கிய மீனவரை பாரிய சொறிமுட்டை தாக்கியதுடன், அவரது நெஞ்சுப் பகுதியில் தாக்குதலுக்குள்ளான அடையாளங்களும் காணப்படுவதாக சம்பவ இடத்திற்கு வருகை தந்த காரைதீவு தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

உடனடியாக கடலிலிருந்து சக மீனவர்களால் மீட்கப்பட்ட குறித்த மீனவர் சிகிச்சைக்காக கொண்டுசெல்லப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 3 பிள்ளைகளின் தந்தை என்பதுடன், காரைதீவு 8ஆம் பிரிவைச் சேர்ந்த சுப்ரமணியம் ஜெயரஞ்சன் (வயது-51) என அடையாளம் காணப்பட்டுள்ளார். தற்போது உயிரிழந்தவரின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# கல்முனை புதிய பஸ் நிலையத்தின் ஒரு பகுதியில் தனிநபரொருவர் கட்டுமானமொன்றை அமைக்க முயற்சி

## சந்தேக நபருக்கெதிராக மாநகர முதல்வர் முறைப்பாடு





(அம்பாறை நிருபர்)

கல்முனை புதிய பஸ் நிலையத்தின் ஒரு பகுதியை உரிமை கொண்டாடிய நபர் ஒருவருக்கெதிராக கல்முனை பொலிஸ் நிலையத்தில் கல்முனை மாநகர சபையினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபைக்குக்கு அருகாமையில் புதிதாக புனர்நிர்மானம் செய்யப்பட்டு மக்களிடம் அண்மையில் கையளிக்கப்பட்ட பஸ் நிலையத்தின் ஒரு பகுதியை தனக்கு சொந்தமானதெனக் கூறி தனிநபர் ஒருவர் நேற்று (08) கட்டுமானம் ஒன்றை மேற்கொள்ளத் தயாராகியுள்ளார்.

இதனை அறிந்த கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் சம்பவ இடத்திற்கு சென்றதுடன், சட்டவிரோதமாக பஸ் நிலையத்தின் ஒரு பகுதியை தனக்கு உரித்தானதென தெரிவித்த நபருடன் கலந்துரையாடிய பின்னர் கல்முனை பொலிஸ் நிலையத்தில் சம்பந்தப்பட்ட நபருக்கு எதிராக முறைப்பாடு ஒன்றினையும் மேற்கொண்டார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த முதல்வர்,

கல்முனை புதிய பஸ் நிலையமானது அரசாங்கத்தின் காணியாகும். இக்காணியில் தனிநபர் உறுதி ஒன்றினைக் கொண்டுவந்து தனக்கு இவ்விடத்தில் உரித்துள்ளதாகக் குறிப்பிட்டு கட்டுமானம் ஒன்றினை நிர்மாணிக்க அடித்தளமிட முற்பட்டுள்ளார். தற்போது குறித்த தனி நபரின் செயற்பாட்டை தடுத்து நிறுத்தி அவருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவுசெய்துள்ளோம். சட்டம் அதன் கடமையைச் செய்யும் என நம்புகின்றேன் என்றார்.

அண்மைக்காலமாக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட அரச காணிகளில் தனிநபர்கள் சிலர் சட்டவிரோதமாக கட்டடங்கள் அமைக்க முயற்சிப்பதுடன், மாநகர சபை அதனை தடுப்பதும் வழமையான சம்பவமாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் தனி நபரினால் அவ்விடத்திற்கு கொண்டுவரப்பட்ட கற்கள், மண் உள்ளிட்ட பொருட்கள் மாநகர சபையினால் எடுத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



இன்னும் மூன்று மாதங்களால் மக்கள் இறக்கும் நிலை வருமாம் எண்டு மகிந்த அமரவீர எம்.பி. சொல்லி இருக்காரு எலுவா. அடே உங்களப்போல முட்டாள்களுக்கு வாக்களிச்சி நாடாளுமன்றம் அனுப்பின பலன்தாண்டா இது. பேசாம எல்லா மக்களுக்குக்கும் நஞ்சு கொடுத்து கொல்லுங்கடா. பேயனுகளும் பிசாசுகளும் கொலகாறனுகளும் ஆட்சில இருக்கும் மட்டும் மக்கள் சாகத்தாண்டா செய்வாங்க. நாசமறுவானுகளே.

# திருமலை பல்கலை மாணவர்கள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்






(திருகோணமலை நிருபர்)

திருகோணமலையில் கிழக்கு மாகாண பல்கலைக்கழக திருகோணமலை வளாக மாணவர்கள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்ட மொன்றில் ஈடுபட்டிருந்தனர்.

கிழக்கு மாகாண பல்கலைக்கழக திருகோணமலை வளாக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்த குறித்த ஆர்ப்பாட்டம், பேரணியாக திருகோணமலை அபயபுர சுற்றுவட்ட சந்தியிலிருந்து ஆரம்பமாகி ஆண்டாங்குளம், திருகோணமலை - கண்டி பிரதான வீதியின் ஊடாக நான்காம் கட்டை சந்தியை வந்தடைந்தது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் 300இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டதுடன், இலங்கைக்கு சரியான நீதி வேண்டும், நாட்டில் பெற்றோல், டீசல் இல்லை, மின்சாரம் இல்லை, ராஜபக்ஷ ஆட்சி முடிவுக்கு வரவேண்டும், நாங்கள் பயணிப்பதற்கு வீதி வேண்டும், அமைதியான போராட்டங்களுக்கு இடமளிக்க வேண்டும் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிசெய் என்ற கோஷங்கள் மற்றும் பதாகைகளை ஏந்தியவாறு நடைபவனியாக வந்து நான்காம் கட்டை சந்தியை குறித்த ஆர்ப்பாட்டம் வந்தடைந்தது.

மேலும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு ஊழல்மிக்க அரசியல்வாதிகளே காரணம் என நாடு முழுவதும் பொதுமக்கள், மாணவர்கள் என அரசுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில் இலங்கை நாடாளுமன்ற வளாகத்திற்கு முன்பாக அமைதியான முறையில் முன்னெடுத்த மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தின்மீது கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த் தாரகை வீசி மாணவர்களை தாக்கி ஆர்ப்பாட்டத்தை கலைக்க பொலிஸ் அதிகாரிகளின் மேற்கொண்ட அடாவடித்தனம், அரசாங்கத்தின் சர்வாதிகாரம் என்பன முழு உலகத்திற்கும் தற்போது தெரியவந்துள்ளது.

இவ்வாறான அமைதி ஆர்ப்பாட்டங்களில் பாதுகாப்புப் படையினரை ஏவி ஆர்ப்பாட்டங் களை கலைக்க முயற்சிக்கும் குறித்த அரசாங்கம் விரைவில் தமது பதவிகளை இராஜினாமா செய்து வீடு செல்ல வேண்டுமெனவும் இல்லாவிட்டால் எதிர்வரும் நாட்களில் தொடர்ச்சியான முறையில் நாடுதழுவிய பல போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் இதன்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 400 கிராம் கஞ்சாவுடன் மட்டக்களப்பில் ஒருவர் கைது



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலில் பிரிவில் 400 கிராம் கஞ்சாவுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குபட்ட எருவில் கிராமத்தில் கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் அடிப்படையில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட சுற்றிவளைப்பின்போது குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார்.

கைதான நபர் களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவீத்தனர்.

# சேதமடைந்துள்ள பஸ் தரிப்பு நிலையத்தை புனரமைத்துத் தருமாறு பயணிகள் கோரிக்கை



(நிந்தவூர் நிருபர்)

சாய்ந்தமருது வரவேற்பு நுழைவாயிலுக்கு அருகில் பிரதேச வைத்தியசாலை பக்கமாக உள்ள பயணிகள் பஸ்தரிப்பு நிலையத்தின் கூரை சேதமடைந்துள்ளதால் மழை காலத்திலும் சுட்டெரிக்கும் வெயிலிலும் பஸ்ஸுக்காக காத்திருக்கும் பயணிகள் பல்வேறு இன்னல்களுக்குள்ளாகி வருகின்றனர்.

சாய்ந்தமருதின் பிரதான கேந்திர நிலையத்தில் அமைந்திருக்கும் இந்த பஸ்தரிப்பு நிலையத்தின் கூரை சேதமடைந்து பல மாதங்களாகியும் இதுவரை சீர்செய்யப்படாமல் காணப்படு கின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு பிரதேசவாசிகளும் பயணிகளும் கேட்டுள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## ஒந்தாச்சிமடத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் அரச உத்தியோகத்தர் பலி!



(மண்டூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம், களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குபட்பட்ட மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் ஒந்தாச்சிமடத்தில் நேற்று முன்தினம் (07) இடம்பெற்ற வாகன விபத்தில் அரச உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த (வயது 58) இரு பிள்ளைகளின் தந்தையான நாகராசா விஜேந்திரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

மட்டக்களப்பு பக்கமிருந்து கல்முனை பக்கம் நோக்கி பணித்த மோட்டார்சைக்கிள் மீது அதே திசையில் பின்னால் சென்ற சொகுசு ரக ஜீப் ஒன்று மோதியதாலேயே இவ்விபத்து சம்பவித்துள்ளதாகவும் குறித்த நபர் எருவில் சமூர்த்தி வங்கியில் காசாளராக கடமையாற்றி வருவதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# டாக்டர் நளிமுதீன் எழுதிய அரசியல் அறம் ஏ.ஆர்.எம். கவிதை நூல் வெளியீட்டு விழா



(மாளிகைக்காடு நிருபர்)

டாக்டர் எஸ்.நளீமுடீன் எழுதிய "அரசியல் அறம் A.R.M" கவிதை நூல் வெளியீடும் ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷனின் இணையதள அங்குரார்ப்பண நிகழ்வும் ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷனின் ஏற்பாட்டில், அதன் ஸ்தாபகத் தலைவி சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளீமுடீன் தலைமையில் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் தமிழ் மொழித்துறை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் நூல் ஆய்வுரை வழங்கியதுடன், அறிஞர் சித்திலெப்பை ஆய்வு மன்றத் தலைவர் சட்டத்தரணி மர்சூம் மௌலானா மற்றும் இஸ்லாமிய ஆசிரியர் சங்க தலைவரும் எழுத்தாளருமான ஆசிரியர் ஜெஸ்மி எம்.மூஸா, கவிதாயினி டாக்டர் புஸ்பலதா லோகநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நூலின் முதற்பிரதியை மறைந்த முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம்.மன்சூரின் பாரியார் சுஹாரா மன்சூர் பெற்றுக்கொண்டார்.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக், கல்முனை வடக்கு உப பிரதேச செயலாளர் டி.ஜெ அதிசயராஜ், சாய்ந்தமருது ஜும்மாப் பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், கலை, இலக்கிய, ஊடக பிரமுகர்கள், முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம்.மன்சூரின் குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட முன்னாள் பிரதிநிதி ஏ.எல்.ஏ.அஸீஸ் மற்றும் கல்முனை மாநகர சபை பிரதி முதல்வர், முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம்.மன்சூரின் புதல்வருமான ரஹ்மத் மன்சூர் ஆகியோர் நவீன தொழில்நுட்பத்தின் வாயிலாக வாழ்த்து செய்தியை தெரிவித்தனர்.

# அமரர் ஸ்ரீ சபாரெத்தினத்தின் 36ஆவது நினைவு தினம் வாழைச்சேனையில் அனுஷ்டிப்பு



(க.கிருபாகரன்)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் முன்னாள் தலைவர் ஸ்ரீ சபாரெத்தினத்தின் 36ஆவது நினைவு தினம் கடந்த வெள்ளிக்கிழமை (06) வாழைச்சேனையில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினர் வை.பரராசசேகரத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அமரர் ஸ்ரீ சபாரெத்தினத்தின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, திருவிளக்கேற்றப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அத்தோடு நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களால் அமரர் ஸ்ரீ சபாரெத்தினம் தமிழ் மக்களின் விடிவுக்காக ஆற்றிய பணிகள் இதன்போது விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

# திருமலையில் வயல் காவலில் ஈடுபட்டிருந்த வயோதிபர் அரவம் தீண்டிய நிலையில் மரணம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, திம்பிரிவெவ பகுதியில் வயல் காவலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வயோதிபர் பாம்புக்கடிக்குள்ளான நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (07) இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு பாம்புக்கடிக்குள்ளானவர் மாத்தளை பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய சுனில் என்றழைக்கப்படும் வயோதிபர் எனவும் தெரியவந்துள்ளது.

தொழில் நிமித்தம் மாத்தளையிலிருந்து வருகைதந்து கடந்த ஆறு வருடங்களாக மஹதிவுல்வெவ பிரதேசத்திலுள்ள வயல் காவல் கடமையில் ஈடுபட்டு வருவதாகவும் வயலுக்குள் யானை வந்தபோது யானையை விரட்டுவதற்காக சென்றபோது பாம்புக் கடிக்குள்ளான நிலையில், மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது உயிரிழந்துள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த குறித்த வயோதிபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் சட்ட வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப் படவுள்ளதாகவும் இதன் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வயோதிபர் மரணித்தமை தொடர்பில் மொரவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு புதிதாக 148 தாதிய உத்தியோகத்தர்கள்

## இணைப்புக் கடிதங்கள் வழங்கிவைப்பு




மத்திய சுகாதார அமைச்சினால் புதிதாக நியமனம் வழங்கப்பட்ட தாதிய உத்தியோகத்தர்களில் 148 பேர் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார அமைச்சால் இணைக்கப்பட்ட 148 தாதிய உத்தியோகத்தர்களில் 45 பேர் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும், 43 பேர் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும், 37 பேர் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும், 23 பேர் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும் இணைக்கப்பட்டு அவர்களுக்கான இணைப்புக் கடிதங்கள் அண்மையில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

இந்நிகழ்வில் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திவாகார சர்மா, நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீவாணி, சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி எஸ்.விஜயகுமார் உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொண்டு குறித்த இணைப்புக் கடிதங்களை வழங்கியதாகவும் தெரிவித்தார்.

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் வவுணதீவு பொலிஸாரால் கைது



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு பொலிஸாரால் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்ட மூன்று உழவு இயந்திரங்களுடன் மூவரை கைதுசெய்துள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.திசாந்த அப்புஹாமி தெரிவித்தார்.

இச்சம்பவம் வவுணதீவு பிரதேசத்திலுள்ள கைலைமடு பகுதியில் இடம்பெற்றுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரின் தகவலுக்கமைவாக மேற்கொண்ட சுற்றுவளைப்பின்போதே மேற்குறித்த மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அனுமதிப்பத்திரம் இருந்தும் சட்டதிட்டங்களை மீறி முறையற்ற விதத்தில் உழவு இயந்திரத்தின் பெட்டியில் மண் ஏற்றிக்கொண்டிருந்தவேளையில் குறித்த நபர்களை கைதுசெய்து உழவு இயந்திரத்தையும் தாம் கைப்பற்றி பொலிஸ் நிலையம் கொண்டுவந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# காத்தான்குடியில் 6 கிலோ கஞ்சாவுடன் அதிரடிப்படையினரால் ஒருவர் கைது



(கனகராசா சரவணன்)

காத்தான்குடி பிரதேசத்தில் கஞ்சா வியாபாரி ஒருவரின் வீட்டை முற்றுகையிட்ட விசேட அதிரடிப்படையினர், அங்கிருந்து 6 கிலோ 910 கிராம் கொண்ட கேரள கஞ்சாவை மீட்டதுடன், கஞ்சா வியாபாரி ஒருவரை கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பிரேமரத்தின தலைமையிலான அதிரடிப்படையினர், குறித்த வியாபாரியின் வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது வியாபாரத்துக்காக பொதி செய்யப்பட்ட நிலையில் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 6 கிலோ 910 கிராம் கொண்ட கஞ்சாவை மீட்டதுடன், கஞ்சா வியாபாரி ஒருவரை கைதுசெய்தனர்.

விசேட அதிரடிப்படையினர் கைது செய்யப்பட்டவர் மற்றும் மீட்கப்பட்ட கஞ்சாவுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கு ஆசிரிய நியமனங்கள் குறித்து மீளாய்வு செய்யுமாறு கல்வி அமைச்சு செயலரிடம் இம்ரான் எம்.பி. கோரிக்கை

(கிண்ணியா நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் வழங்கப்பட்ட கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனப் பாடசாலைகள் குறித்து மீளாய்வு செய்யுமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் அண்மையில் வழங்கப்பட்ட கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனங்கள் தொடர்பில் பல ஆசிரியர்கள், பெற்றோர்களினால் பல்வேறு குறைபாடுகள் என்னிடம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.



அவற்றில் பொதுவாக பின்வரும் விவரங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன என்பதை தங்களது கவனத்திற்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, போக்குவரத்துப் பிரச்சினைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு இயன்றவரை ஆசிரியர்களின் வசிப்பிடத்திற்கு அண்மையில் உள்ள பாடசாலைகள் வழங்கப்பட வேண்டுமென்பதை கொழும்பு கல்வி அமைச்சின் செயலாளர் ஏற்றுக்கொண்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளிவந்திருந்தது.

இந்நிலையில் கிழக்கு மாகாணத்தில் கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனம் பல ஆசிரியர்களுக்கு வசிப்பிடத்திலிருந்து வெகுதூரத்தில் வழங்கப்பட்டுள்ளது. சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட பஸ் போக்குவரத்தின் மூலமே பாடசாலையை சென்றடையக் கூடியதாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநராக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா பணியாற்றிய காலத்தில் ஆசிரியைகளுக்கு (பெண்களுக்கு) பஸ் போக்குவரத்திற்கு ஏற்றவகையில் பாடசாலைகள் வழங்கும் நடைமுறை இருந்தது. எனினும், தற்போது வழங்கப்பட்ட நியமனத்தில் இது கவனத்திற்கொள்ளப்படாமல் ஆசிரியைகள் பஸ்ஸிலிருந்து இறங்கி முச்சக்கரவண்டியில் சில கிலோமீற்றர்கள் பயணம் செய்து பாடசாலைக்குச் செல்லும் வகையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சில பாடங்களுக்கு குறித்த பாடசாலையில் தேவை இல்லாதபோதிலும் அங்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. சில பிரதேசங்களில் குறித்த பாடத்துக்கு வெற்றிடம் நிலவியபோதிலும் அப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் வேறு பிரதேச பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை, வேறு பிரதேச ஆசிரியர்கள் அவ்வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட சில ஆங்கில ஆசிரியர்கள் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். ஆங்கிலம் கற்பிப்பதாய் இருந்தாலும் விளக்கங்களை சிங்கள மொழியில் செய்ய முடியாத நிலை இந்த ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் சரியாகக் கற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த சில பிரதேசங்களிலுள்ள பாட வெற்றிடத்திற்கு அப்பிரதேச ஆசிரியர்கள் இருந்தபோதிலும் அவர்களை வேறு பிரதேசத்துக்கு நியமித்து அப்பிரதேச வெற்றிடத்திற்கு வேறு பிரதேச ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

என்னிடம் முறையீடு செய்துள்ள ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ள விடயங்களின் சாராம்சமே இவையாகும். எனவே, இந்த விடயங்கள் குறித்து மீள்பரிசீலனை செய்து குறித்த பிரதேச ஆசிரியர்களை குறித்த வலய வெற்றிடத்துக்கு நியமிக்க முன்னுரிமை கொடுத்து அங்கு வெற்றிடம் இல்லாவிடின் இயன்றவரை அயல் வலய வெற்றிடங்களுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையையும், ஆசிரியர்களின் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு இவ்விடயத்திற்கு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுப்பீர்களென பெரிதும் எதிர்ப்பார்க்கிறேன்.

- இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உவர்மலையில் 60 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட பூங்கா ஆர்ப்பாட்டக்காரர்களால் திறப்பு




(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை உவர்மலை பிரதேசத்தில் மக்கள் பாவனைக்காக அமைக்கப்பட்டு, அரசியல்வாதிகளினால் திறந்துவைக்கப்படவிருந்த பூங்கா ஆர்ப்பாட்டக்காரர்களால் திறந்துவைக்கப்பட்டது.

திருகோணமலை உவர்மலை பிரதேசத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பூங்கா ஒன்றே கடந்த வெள்ளிக்கிழமை (06) குறித்த ஆர்ப்பாட்டக்காரர்களினால் திறந்துவைக்கப்பட்டது.

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் 100 நகர அபிவிருத்தித் திட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் மென் ஓட்டப்பந்தய திட்டம், பொதுப் பூங்கா ஒன்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில யுவனின் வேண்டுகோளுக்கிணங்க நகர அபிவிருத்தி கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் 59.95 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட குறித்த பூங்கா ஆர்ப்பாட்டக்காரர்களினால் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

குறித்த பூங்காவானது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவனின் வேண்டுகோளுக்கிணங்க முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாக மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்படவிருந்த நிலையில், குறித்த ஆர்ப்பாட்டக்காரர்களினால் மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது.

மேலும் மக்கள் பாவனைக்காக ஆர்ப்பாட்டக் காரர்களினால் திறந்துவைக்கப்பட்ட பூங்காவின் நடுவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரின் புகைப்படங்கள் பொறிக்கப்பட்ட சவப்பெட்டி ஒன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் எரியூட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பாலமுனை பொலிஸ் காவலரண் எரிப்புச் சம்பவம்; விசாரணைகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம்

(அம்பாறை நிருபர்)

அம்பாறை மாவட்டம், அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட பாலமுனை வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள பொலிஸ் காவலரண் பகுதியில் கடந்த வியாழக்கிழமை (05) இரவு 11.30 மணியளவில் ஏற்பட்ட சம்பவம் ஒன்றின் காரணமாககாயமடைந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை மற்றும் அம்பாறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்களிடம் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

இதற்கமைய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையிலான குழு கடந்த வெள்ளிக்கிழமை (06) சம்பவ இடத்தைப் பார்வையிட்டதுடன், குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்பிடம் வாக்குமூலங்களை பெற்றுக்கொண்டனர்.

மேலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் தலைமையிலான குழுவினர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம் மற்றும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பொலிஸார் மற்றும் பொதுமக்களிடம் இவ்விடயம் சம்பந்தமாக விசாரணைகளை ஆரம்பித்து வாக்குமூலங்களை பெற்றுள்ளனர்.

குறித்த சம்பவ இடத்தில் பொலிஸாரினால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் நபர் ஒருவர் இறந்துவிட்டதாக அங்கு நின்றவர்கள் கூறிய வதந்தியே கலவரமாக மாறுவதற்கு வழியேற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.







இது தவிர, குறித்த சோதனைச்சாவடி தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகளும் ஏற்கனவே வெளியாகியுள்ளதாக தற்போதைய விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவ தினமன்று குறித்த சோதனைச்சாவடியை தலைக்கவசமின்றி மோட்டார்சைக்கிளை செலுத்தி வந்தவர்கள் மோதியதாகவும் அதனால் ஏற்பட்ட விசாரணையின்போது பதற்றம் ஏற்பட்டதாக பொலிஸ் தரப்பினர் குறிப்பிட்டுள்ளதுடன், பொதுமக்கள் பொலிஸாரின் அறிக்கை உண்மைக்குப் புறம்பானதென தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் பூர்வாங்க விசாரணை அறிக்கையை உடனடியாக அனுப்புமாறு அக்கரைப்பற்று பொலிஸாரிடம் மனித உரிமைகள் ஆணைக்குழு கேட்டுள்ளது.

**சம்பவம்**

அம்பாறை மாவட்டம் – பாலமுனை பிரதேசத்தில் பொலிஸாரின் வீதித் தடைக் காவலரண் ஒன்றை பொதுமக்கள் தீ வைத்து எரித்துள்ளதோடு, அங்கிருந்த பொலிஸார் மற்றும் ஊர்க்காவல் படையினர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். கடந்த வியாழக்கிழமை (05) இரவு இச்சம்பவம் நடந்துள்ளது.

வீதித் தடைக் காவலரணில் இருந்த ஊர்க்காவல்படை உத்தியோகத்தர் ஒருவர் – பொதுமகன் ஒருவரை மிகவும் மோசமாகத் தாக்கியதாகவும் அதனையடுத்து அங்கிருந்த பொலிஸ் மற்றும் ஊர்க்காவல் படை உத்தியோகத்தர்கள் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தியதோடு, வீதித் தடைக் காவலரண் மீது தீ வைத்ததாகவும் சம்பவ இடத்தில் இருந்தோர் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து அந்த இடத்துக்கு வந்திருந்த அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதன்போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் பொதுமக்கள் இருவர் காயமடைந்தனர். 40 வயதுடைய இமாமுதீன் என்பவரும், 31 வயதுடைய பாஹிர் என்பவரும் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக வைத்திய அத்தியட்சகர் ஆஷாத் எம்.ஹனீபா தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸார் 06 பேரும், ஊர்க்காவல் படையினர் 03 பேரும் சிறிய காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் வைத்திய அத்தியட்சகர் கூறினார். துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான பொதுமக்களில் இமாமுத்தீன் என்பவருக்கு கையிலும், பாஹிர் என்பவருக்கு வயிற்றிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சம்பவத்தை அறிந்து அங்கு சென்ற அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஊடகவியலாளர் உட்பட 10இற்கும் மேற்பட்ட பொலிஸார், பொதுமக்கள் என 16 பேர் காயமடைந்த நிலையில், சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், சம்பவம் தொடர்பில் ஆராய கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி கமல் சில்வா உள்ளிட்ட பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகள் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

# உலக செய்திகள்

## 74ஆவது நாளை எட்டிய ரஷ்ய - உக்ரைன் மோதல்



# கார்கிவ்வில் ரஷ்யா ரொக்கெட் தாக்குதல்: அமெரிக்கா வழங்கிய ஆயுதங்கள் அழிப்பு

உக்ரைனின் கார்கீவ் நகரில் ஆயுதக் கிடங்குகள் மீது குண்டுவீசிய ரஷ்ய இராணுவம், அங்கு வைக்கப்பட்டிருந்த அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தந்த ஆயுதங்களை அழித்துவிட்டதாக தெரிவித்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் இன்று 74ஆவது நாளை எட்டியுள்ளது. கிழக்கு உக்ரைனை மொத்தமாக கைப்பற்றும் திட்டத்துடன் ரஷ்யப் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்நிலையில், வெள்ளிக்கிழமை இரவுமுதல் சனிக்கிழமைவரை கார்கீவ், ஒடேசா துறைமுக நகரம் ஆகிய இடங்களிலுள்ள உக்ரைன் ஆயுதக் கிடங்குகளை குறிவைத்து ரஷ்ய இராணுவம் ரொக்கெட் குண்டுவீச்சு தாக்குதல் நடத்தியது. இதில் ஒடேசா துறைமுக நகரத்தின் துஷ்ஷோரா பகுதியிலிருந்த 3 ஆயுதக் கிடங்குகள் உட்பட
18 உக்ரைன் இராணுவத் தளங்களை இரவோடு இரவாக ரஷ்யா அழித்துள்ளது.

அதேபோல், கார்கிவ் நகரின் பொகுடிகோவ் ரயில் நிலையம் அருகே இருந்த உக்ரைனின் ஆயுதக் கிடங்கையும் ரஷ்யா அழித்துள்ளது. இங்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் வழங்கிய நவீன ஆயுதங்களை உக்ரைன் இராணுவம் வைத்திருந்ததாகவும், அவை மொத்தமாக அழிக்கப்பட்டுள்ளதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

**அசோவ்ஸ்டல் உருக்காலையில் சிக்கியிருந்த அனைவரும் வெளியேற்றம்**

இதற்கிடையே ரஷ்யப் படைகளால் முற்றுகையிடப் பட்ட மரியுபோலிலுள்ள அசோவ்ஸ்டல் உருக்காலை யிலிருந்து பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என அனைவரும் வெளியேற்றப்பட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பதிவுவொன்றை வெளியிட்டுள்ள அந்நாட்டு துணைப் பிரதமர் இரினா வெரேஷ்சுக், ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் அசோவ்ஸ்டலி லிருந்து மக்களை வெளியேற்றும் மனிதாபிமானப் பணிகள் நிறைவடைந்துவிட்டதாக தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மற்றும் செஞ்சிலுவை சங்கத்தின் உதவியுடன் மீட்புப் பணிகள் நடைபெற்றதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. எனினும், 200இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் சோவியத் கால சுரங்கப்பாதைகளிலும், அசோவ்ஸ்டல் உருக்காலையின் அடியிலுள்ள பதுங்கு குழிகளிலும் சிக்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே, உக்ரைனுக்கு மேலும் ரூ.1,125 கோடி மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார். இதன்மூலம் உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கியுள்ள இராணுவம் மற்றும் பிற உதவிகளின் மொத்த மதிப்பு ரூ. 28,500 கோடியாக அதிகரித்துள்ளது. அதேபோல், உக்ரைனுக்கு மேலும் இராணுவ உதவிகளை அனுப்ப நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்புதல் அளிக்கும்படியும் பைடன் வேண்டுகோள் விடுத்துள்ளார். அமெரிக்காவின் தொடர் இராணுவ உதவியால் உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் முடிவுக்கு வராமலும், பேச்சுவார்த்தையின்றி தொடர்ந்து நீடித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்று புட்டின் முக்கிய அறிவிப்பு

**இன்று முக்கிய அறிவிப்பு**

இரண்டாம் உலகப் போரில் சோவியத் ஒன்றியம் வெற்றிபெற்றதன் 77ஆவது ஆண்டு விழாவை ரஷ்யா இன்று கோலாகலமாக கொண்டாடவுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் வெற்றிவிழா அணிவகுப்பில் 2ஆம் உலகப் போரில் உயிர் நீத்த ரஷ்ய வீரர்களின் புகைப்படங்கள் அலங்கரிக்கப்பட்டு அவர்களின் குடும்பத்தினர் கௌரவிக்கப்படுவது வழக்கம். இம்முறை உக்ரைன் போரில் உயிரிழந்த வீரர்களின் புகைப்படங்களும் வைக்கப்பட்டு அவர்களின் குடும்பத்தினரையும் கௌரவிக்க அந்நாட்டு ஜனாதிபதி புட்டின் உத்தரவிட்டுள்ளார்.

அதோடு, இன்று (மே 9ஆம் திகதிக்குள்) கிழக்கு உக்ரைனை ரஷ்யா மொத்தமாக தன் வசப்படுத்திக் கொள்ள திட்டமிட்டிருப்பதாக அந்நாட்டின் மூத்த இராணுவ அதிகாரி கடந்த சில நாட்களுக்கு முன் தெரிவித்திருந்தார். இதனால் இன்று இதுதொடர்பான முக்கிய அறிவிப்பை புட்டின் வெளியிடுவாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இதற்காக, உக்ரைனில் நேற்றும் ரஷ்யா தனது தாக்குதலை தீவிரப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**ரஷ்யாவுடன் பேச்சு நடத்த தயார்**

போர் நிறுத்தம் குறித்து பேச்சு நடத்த தயாராக இருப்பதாக தெரிவித்துள்ள உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி, படையெடுப்புக்கு முந்தைய நிலையை ரஷ்யா உறுதிசெய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

போர் நிறுத்தம் குறித்து பேச்சு நடத்த தயாராக இருப்பதாக தெரிவித்துள்ள ஸெலன்ஸ்கி, படையெடுப்புக்கு முந்தைய நிலையை ரஷ்யா உறுதிசெய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ரஷ்யப் படைகளை முழுமையாக திரும்பப் பெறுவதோடு, போருக்கு முன் இருந்த நிலைகளுக்கு செல்ல வேண்டும் எனவும், பெப்ரவரி 23ஆம் திகதிக்கு முன் உக்ரைன் இருந்த நிலைமையை மீட்டெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

**உக்ரைன் அமைதி நடவடிக்கைக்கு ஐ.நா. பாதுகாப்பு சபை ஆதரவு**

உக்ரைனில் அமைதி திரும்ப ஐ.நா. பொதுச் செயலர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைக்கு, ஐ.நா. பாதுகாப்பு சபை ஒருமனதாக ஆதரவு தெரிவித்துள்ளது. நல்லிணக்க முயற்சி இரண்டு மாதங்களுக்கும் மேலாக ரஷ்யா - உக்ரைன் இடையே போர் நடந்து வருகிறது.

இந்நிலையில், ஐ.நா. பொதுச் செயலர் அன்டோ னியோ குட்டரெஸ், ரஷ்யா மற்றும் உக்ரைன் ஜனாதி பதிகளை சந்தித்து அமைதிப் பாதைக்கு திரும்புவதற் கான முயற்சிகளை மேற்கொண்டார். இதையடுத்து உக்ரைனில் அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிக்க வும், அன்டனியோ குட்டரெஸின் நல்லிணக்க முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தும், அமெரிக்கா தலைமையிலான ஐ.நா. பாதுகாப்பு சபை கூட்டத்தில் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கு 15 உறுப்புநாடுகளும் ஏகமனதாக ஆதரவு தெரிவித்தன. ஐ.நா. பாதுகாப்பு சபை ஏற்கனவே உக்ரைன் போர் தொடர்பாக ரஷ்யாவிற்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. எனினும், உக்ரைனில் அமைதி திரும்ப, இரு தரப்பும் சமரச பேச்சு வாயிலாக தீர்வு காணவேண்டும் என்ற தீர்மானம் முதன்முறையாக தற்போதுதான் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தில் ரஷ்யா தொடுத்த போர் அல்லது கலகம் என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**புட்டினின் சொகுசுக் கப்பலை பறிமுதல்**

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் தொடர் புடையதாகக் கூறப்படும் 5,400 கோடி ரூபா மதிப்பு டைய சொகுசுக் கப்பலை இத்தாலி அரசு பறிமுதல் செய்துள்ளது. 6 தளங்களும், 2 ஹெலிகொப்டர் இறங்குதளங்களும் கொண்ட இந்த சொகுசுக் கப்பல் புட்டினுக்குச் சொந்தமானது என்பதற்கான சான்றுகளை அலெக்சி நவல்னியால் நிறுவப்பட்ட அமைப்பு வெளியிட்டுள்ளது.

இந்தக் கப்பலில் ஒரே நேரத்தில் விருந்தினர்கள் 18 பேரும், மாலுமி பணியாளர்கள் 40 பேரும் தங்க முடியும். ரஷ்ய எண்ணெய் நிறுவனமான ரோஸ்னப்டின் முன்னாள் தலைவர் எட்வர்ட் குடைநட்டோவ் பெயரிலுள்ள இந்தக் கப்பல் இத்தாலியின் மரினா டி கராரி துறைமுகத்துக்குப் பழுதுபார்க்கக் கொண்டுவரப்பட்டது.

மீண்டும் புறப்படத் தயாரான நிலையில் ரஷ்ய அரசுக்குத் தொடர்புடையது எனக் கூறி இந்தக் கப்பலை பறிமுதல் செய்ய இத்தாலி நிதியமைச்சு உத்தரவிட்டது. அதையடுத்து பொலிஸார் கப்பலை பறிமுதல் செய்தனர்.

## "இயற்கை கொடுத்த வரம் அன்னை"

### ஸ்டாலின் அன்னையர் தின வாழ்த்து



"இயற்கை ஒவ்வொருவருக்கும் கொடுத்த வரம் அன்னை" என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது ட்விட்டர் பக்கத்தில், அன்னையர் தின வாழ்த்துச் செய்தி பதிவிட்டுள்ளார்.

உலகம் முழுவதும் நேற்று அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது. நிகரில்லாத தாயின் பெருமையைப் போற்றிடும் நாள் இந்த நாள்.

இறைவன் எல்லா இடங்களிலும் இருப்பதற்காகவே தாயைப் படைத்தான் என்பது பழமொழி. விலங்குகள், பறவைகள், பூச்சிகள்... எதுவும் தாயின் அன்புக்கு விதிவிலக்கல்ல. தன் குஞ்சுக்கு தான் தேடிய இரையை ஊட்டி களிக்கும் பறவைக்குக் கூடத் தெரியும் தாய்மை என்பது என்னவென்று.

இந்நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தனது தாய் தாயாளு அம்மாவுக்கு முத்தமிடும் புகைப்படத்தை தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்து அதில், "உயிராய் நமைச் சுமந்து காலமெல்லாம் நனைக்கும் அன்பு மழை, அன்னை. அன்பு, ஆறுதல், அரவணைப்பு, ஊக்கம் என மனிதன் ஏங்கும் உணர்வுகளுக்கு அகராதி சொல்லும் முதல் விடை, அன்னை.

உயிரைத் துளைத்து அன்புக் கடலைப் புகட்டி இயற்கை ஒவ்வொருவருக்கும் கொடுத்த வரம், அன்னை" என்று பதிவிட்டிருந்தார்.

## நகரையே சூறையாடிய காட்டுத் தீ: 8 பேர் பலி; அவசரநிலை பிரகடனம்



சைபீரியாவின் கிரஸ்னயார்ஸ்க் மாகாணத்தில் வேகமெடுத்துள்ள காட்டுத் தீயில் சிக்கி குழந்தைகள் உட்பட 8 பேர் உயிரிழந்த நிலையில், அப்பகுதியில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

திடீரென பற்றிய தீ குடியிருப்புகளுக்கு பரவி காட்டுத் தீயாய் மாறியது. 12 மாவட்டங்களிலுள்ள கிராமங்களை சிதிலமாக்கிய காட்டுத் தீ, 350இற்கும் மேற்பட்ட கட்டடங்களை உருக்குலைத்தன.

மோசமான வானிலையால் கட்டுக்கடங்காமல் தீ பரவி புகைமண்டலமாக காட்சியளிக்கிறது.

## தென்னை மரத்தில் ஏறி இளநீர் பறிக்கும் 7 வயது சிறுமி



கராத்தே, சிலம்பம், நீச்சல் என பல்வேறு தற்காப்புக் கலைகளை கற்றதுடன், தென்னை மரத்தில் ஏறி இளநீர் பறித்து 7 வயது சிறுமி அசத்தி வருகிறார்.

காரியாபட்டி மாந்தோப்பைச் சேர்ந்த பார்த்தசாரதி என்பவரின் 7ஆவது மகள் சியாமளாதேவி, அச்சங்குளம் பகுதியிலுள்ள பாடசாலையில் 2ஆம் வகுப்பு படித்து வருகிறார். சிறுவயதிலே கராத்தே, சிலம்பம், நீச்சல் என பல்வேறு தற்காப்புக் கலைகளை ஆர்வமுடன் கற்றதோடு, 50, 70 அடி தென்னை மரத்தில் 2, 3 நிமிடங்களில் அசால்டாக ஏறி இளநீரை பறித்துப் போட்டு அசத்தி வருவதுடன், கிளைகளை பிடித்து லாவகமாக இறங்கிவருவது காண்போரை வியக்க வைக்கிறது.

இதுகுறித்து சியாமளாதேவி தெரிவிக்கையில்,

"எனது தாத்தாதான் தற்காப்புக் கலைகளை கற்றுத் தந்தார். எந்தவொரு பயமும் இல்லாமல் மரத்தில் ஏறி இளநீர் பறித்து விடுவேன். விருந்தினர் வந்தால் இளநீர் கொடுத்து உபசரிப்போம். நான் மரம் ஏறுவதைக் கண்டு ஆச்சரியப்படுவர். என்னை பாராட்டி ஊக்கப்படுத்தும்போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். அடுத்தடுத்த கலைகளை ஆர்வமாக கற்று வருகிறேன்" - என்கிறார்.

## கியூபாவில் எரிவாயு கசிவால் வெடித்துச் சிதறிய நட்சத்திர ஹோட்டல்

### 32 பேர் உயிரிழப்பு; பலர் காயம்; 19 பேர் மாயம்





கியூபா தலைநகர் ஹவானாவிலுள்ள புகழ்பெற்ற நட்சத்திர விடுதியொன்றில் எரிவாயு கசிவால் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 32 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர். அத்தோடு கட்டட இடிபாடுகளில் சிக்கி 19 பேர் மாயமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நூற்றாண்டு பழமையான வரலாற்றுச் சிறப்புமிக்க சரடோகா (Saratoga) நட்சத்திர ஹோட்டலில்தான் அமெரிக்க அரசு அதிகாரிகள், விஐபிக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் தங்குவது வழக்கமாகும்.

நேற்றுமுன்தினம் எரிவாயு கசிவின் காரணமாக பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. இதில் ஹோட்டலின் முன்பகுதி உருக்குலைந்தது. 96 அறைகளைக்கொண்ட ஹோட்டலின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்தது. இது குறித்து தகவலறிந்த பொலிஸார் மற்றும் தீயணைப்புத் துறையினர் அங்கு விரைந்து இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்டனர்.

இந்த விபத்தில் ஸ்பெயினைச் சேர்ந்த பெண்ணொருவர் உட்பட 32 பேர் உயிரிழந்துள்ளதுடன், 74 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். மீட்கப்பட்டவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைளில் சேர்க்கப்பட்டனர். இந்த விபத்தில் அருகிலிருந்த பாடசாலை கட்டடமும் சேதமடைந்ததாகவும் காயமடைந்த 15 குழந்தைகளுள் ஒரு குழந்தை உயிரிழந்து விட்டதாகவும் அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

சம்பவம் குறித்த முதல் கட்ட விசாரணையில் ஹோட்டலில் இயற்கை எரிவாயு கசிவு காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், விபத்து நடந்த நேரத்தில் ஹோட்டல் மூடப்பட்டிருந்ததாகவும் தொழிலாளர்கள் மட்டுமே உள்ளே இருந்ததாகவும் அரசின் தொலைக்காட்சி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. அத்தோடு கட்டட இடிபாடுகளில் சிக்கி 19 பேர் மாயமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தான் சேமித்து வைத்திருந்த ரூ. 20ஆயிரத்தை இலங்கையர்களுக்காக வழங்கிய கீழக்கரை சிறுமி



(மன்னார் நகர் நிருபர்)

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையைச் சேர்ந்த பில்சா சாரா என்ற சிறுமி தான் சேமித்து வைத்திருந்த 4,400 ரூபாவை (இலங்கை ரூபாப்படி 20,295.67) பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்காக கையளித்துள்ளார்.

மேற்படி சிறுமி இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகர் மன்ற உறுப்பினர் சஹானாஸ் ஆபிதாவின் தங்கை பையினாவின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

இந்நிலையில், இலங்கை மக்களுக்காக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சங்கர் லால் குவமத்திடம் தனது சேமிப்புப் பணமான 4400 ரூபாவை நேற்றுமுன்தினம் (7ஆம் திகதி) கையளித்துள்ளார்.

## வடகொரியா மீண்டும் ஏவுகணை பரிசோதனை



வட கொரியா மீண்டும் ஏவுகணை சோதனையில் ஈடுபட்டதாக தென் கொரியா தெரிவித்துள்ளது.

சின்ப்போ துறைமுகத்துக்கு அருகே நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து அந்த ஏவுகணையை வடகொரியா சனிக்கிழமை செலுத்தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அமெரிக்காவை பேச்சுக்கு இழுப்பதற்காக வடகொரியா ஏவுகணை சோதனைகளை அதிகரித்து வருவதாகவும் விரைவில் அந்த நாடு அணு ஆயுத சோதனையில் ஈடுபடலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோல் வடகொரியா செலுத்திய ஏவுகணை தங்களது பிரத்தியேக பொருளாதார மண்டலம் பிரிவிற்கு வெளியே விழுந்ததாக ஜப்பான் பாதுகாப்புத்துறை ட்விட்டரில் தெரிவித்துள்ளது.

# அடுத்தாண்டு ஐ.பி.எல்லில் களமிறங்க ரெடி என்கிறார் கெயில்




மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான கிறிஸ் கெயில், அடுத்த ஆண்டு ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கவுள்ளதாக விருப்பம் தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு பேட்டியளித்த அவர், இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடரில் பங்கேற்காதது குறித்து வெளிப்படையாக பேசியுள்ளார். அதில், ஐ.பி.எல். லீக்கில் தான் மரியாதையாக நடத்தப்படவில்லை என பகிரங்கமாக குற்றஞ்சாட்டியுள்ளார். ஆண்டுக்கு ஆண்டு ஐ.பி.எல். வடிவம் மாறிக்கொண்டே செல்வதாக தெரிவித்த கெயில், இந்த ஆண்டு ஏலத்தில் தன்னுடைய பெயர் பதிவு செய்யாததற்கு மரியாதையே காரணம் எனக் கூறியுள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் மூன்று அணிகளுக்காக விளையாடியிருந்தாலும், பல்வேறு சாதனைகள் படைத்திருந்தாலும் மரியாதை இல்லாதபோது காலத்துக்கேற்ப மாறிக்கொள்வது அவசியம் என்பதை புரிந்துகொண்டதாக அவர் கூறியுள்ளார். அதனால் தான் இந்த ஆண்டு ஐ.பி.எல். மெகா ஏலத்தில் தன்னுடைய பெயரை பதிவு செய்யவில்லை எனத் தெரிவித்த அவர், இன்னும் ஐ.பி.எல்லுக்கு தன்னுடைய தேவை இருப்பதாக கூறியுள்ளார்.

கொல்கத்தா, பஞ்சாப் மற்றும் ஆர்.பி.சி. அணிகளுக்காக விளையாடிருப்பதை தெரிவித்த அவர், அதில் பஞ்சாப் மற்றும் ஆர்.சி.பி. அணிகள் சம்பியனாகவில்லை எனக் கூறியுள்ளார்.

இந்த இரண்டு அணிகளில் ஏதேனும் ஓர் அணியில் அடுத்த ஆண்டு ஐ.பி.எல். போட்டியில் களமிறங்க விருப்பம் இருப்பதாகவும் வாய்ப்புக் கிடைத்தால் அடுத்த ஆண்டு நிச்சயம் களமிறங்குவேன் எனவும் கூறியுள்ளார்.

அதற்காக தன்னை முழுமையாக தயார் நிலையில் வைத்துக்கொள்வேன் என்றும் கெயில் கூறியுள்ளார். ஐ.பி.எல். வரலாற்றில் அதிக சதங்கள் அடித்தவர், தனிநபர் அதிகபட்சம், அதிக சிக்சர் உள்ளிட்ட ஏராளமான சாதனைகளை தன்வசம் வைத்துள்ளார் கிறிஸ் கெயில்.




# அமெரிக்காவில் சாதிக்கும் நம்மவர்

இலங்கையின் உயரம் பாய்தல் நட்சத்திரமான உஷான் திவங்க பெரேரா, அமெரிக்காவில் நடைபெற்ற லோங் ஸ்டார் கன்பெரன்ஸ் வெளியக சம்பியன்ஷிப் போட்டியில் ஆண்களுக்கான உயரம் பாய்தலில் முதலிடம் பிடித்து அசத்தியுள்ளார். டெக்சாஸில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் பங்குகொண்ட அவர், 2.20 மீற்றர் உயரத்தைத் தாவி முதலிடத்தைப் பிடித்தார்.

குறித்த போட்டியில் 2.11 மீற்றர் உயரத்தைத் தாவி ஜஸ்டின் லீவிஸ் இரண்டாவது இடத்தையும், 2.08 மீற்றர் உயரத்தைத் தாவிய டாகர் ஹில் மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர். இதேவேளை, குறித்த போட்டியில் பங்குகொண்ட மற்றுமொரு இலங்கை வீரரான செனிரு அமரசிங்க, 2.00 மீற்றர் உயரத்தைத் தாவி 5ஆவது இடத்தை தனதாக்கினார்.

நீர்கொழும்பு மாரிஸ்டெல்லா கல்லூரியின் பழைய மாணவரான 24 வயதுடைய உஷான் திவங்க, இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தினால் வழங்கப்பட்ட விசேட புலமைப்பரிசிலின் கீழ் அமெரிக்காவின் டெக்சாஸிலுள்ள ஏஎண்ட்எம் வணிக பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியுடன், உயரம் பாய்தலுக்கான மேலதிக பயிற்சிகளை முன்னெடுத்து வருகின்றார்.

# 14ஆவது வீரராக பதிவான தமிழக வீரர் சுதர்சன்

நடப்பு இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஹிட் விக்கெட் முறையில் ஆட்டமிழந்ததன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் ஹிட் விக்கெட் முறையில் ஆட்டமிழந்த 14ஆவது வீரராக பதிவானார் குஜராத் டைட்டன்ஸ் அணியின் இளம் துடுப்பாட்ட வீரரான தமிழகத்தைச் சேர்ந்த சாய் சுதர்சன்.

ரோஹிட் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற ஆட்டத்தில் அவர் 14 ஓட்டங்களை பெற்றிருந்த வேளையில் 'ஹிட்' விக்கெட் முறையில் ஆட்டமிழந்தார். ஐ.பி.எல். வரலாற்றில் ஹிட் விக்கெட் முறையில் ஆட்டமிழந்த 14ஆவது வீரர் சாய் சுதர்சனாவார்.

இதற்கு முன்னர் முஷாவிர் கோட்டே, மிஸ்பா உல்ஹக் (2008), சுவனபில் அஸ்னோகர் (2009), ரவீந்திர ஜடேஜா, சவுரப் திவாரி (2012), யுவராஜ் சிங், தீபக் ஹூடா, டேவிட் வார்னர் (2016), ஷெல்டன் ஜேக்சன் (2017), ரியான் பராக் (2019), ஹர்திக் பாண்ட்யா, ரஷீட் கான் (2021), பேர்ஸ்டோவ் (2021) ஆகியோர் இதே ஹிட் விக்கெட் முறையில் ஆட்டமிழந்திருந்தனர்.




# பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக பேராசிரியர் ஜீ.எச்.பீரிஸ் நியமனம்



பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வேந்தராக பேராசிரியர் ஜீ.எச்.பீரிஸ் நியமிக்கப் பட்டுள்ளார்.

அவர் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

1960இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் முதல் தரப் பட்டம் பெற்ற பேராசிரியர் ஜீ.எச்.பீரிஸ், 1965இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பொருளாதார புவியியல் துறையில் தனது முனைவர் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக தனது முதல் நியமனத்தைப்பெற்ற அவர், 44 வருடங்களாக பல்கலைக்கழக விரிவுரையாளராக கடமையாற்றியுள்ளார்.

பேராசிரியர் ஜீ.எச்.பீரிஸ், உலகின் பல்வேறு பகுதிகளில் இடம்பெறும் அரசியல் மாற்றம் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ள நிபுணராவார்.

# கூரிய ஆயுதத்தால் பெண்ணைத் தாக்கியவர் மின்சாரம் தாக்கிப் பலி

## கிரிபத்கொடையில் சம்பவம்

கிரிபத்கொடை பகுதியில் கூரிய ஆயுதத்தால் பெண்ணொருவரை தாக்கிய நபர் ஒருவர் மின்சாரம் தாக்கிப் பலியாகியுள்ளார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் முந்தல் பகுதியை வசிப்பிடமாகக்கொண்டிருந்த 29 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

கிரிபத்கொடையிலுள்ள வீடொன்றுக்கு குளிரூட்டியை பழுதுபார்ப்பதற்காக சில மாதங்களுக்கு முன்னர் குறித்த நபர் சென்றுள்ளார். அங்கிருந்த பெண்ணை காதலிக்குமாறு அவர் வற்புறுத்திவந்துள்ளார். இந்நிலையில், தொடர்ச்சியாக தனக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாகக் கூறி அந்தப் பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

இதனையடுத்து அந்த நபரை பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர். நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் பிணையில் வந்த நபர் அந்தப் பெண்ணை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார். அதன்பின்னர் அந்த வீட்டின் மேல்மாடிக்குச் சென்று மின்கம்பியில் கைவைத்துள்ளார். அதன் காரணமாக மின்சாரம் தாக்கி ஆபத்தான நிலையில் கிரிபத்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதன் பின்னர் அந்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, காயமடைந்த பெண் கிரிபத்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிபத்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆண்டிமுனையில் மருத்துவ பரிசோதனை தொடர்பான விசேட கலந்துரையாடல்





*(உடப்பு செய்தியாளர்)*

உடப்பு கிராம மக்களுக்கான (35 வயதுக்கு மேற்பட்ட) இலவச வைத்திய சேவையின் ஒரு கட்டமான இரத்தம், சிறுநீர், நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்றவற்றை பரிசோதனை செய்வது சம்பந்தமான விசேட கலந்துரையாடலொன்று ஆண்டிமுனை பொது வைத்தியசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை வைத்திய அதிகாரிகள் தலைமையில் இடம்பெற்றது.

இதனை உடப்பு பகுதி வைத்தியசாலை சங்கத் தலைவர் என்.கமலேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார். இதன்போது முக்கியமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் காலை 7மணியளவில் கட்டம் கட்டமாக மக்கள் வந்து பரிசோதனை செய்வது அறிவிக்கப்பட்டது.

இதன் இரத்த மாதிரிகள் புத்தளம் மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு பரிசோதனை செய்யப்படும். பின்னர் அதன் பெறுபேறுகள் உடப்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படவுள்ளதாக வைத்தியர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் மகளிர் சங்கத்தின் தலைவர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், இந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர், இறால் பண்ணைகள் சங்கத்தினர், ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் போன்றோர் கலந்துகொண்டனர்.

# மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் தனது கடமைகளை பொறுப்பேற்பு



மியன்மாருக்கான இலங்கையின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட ஜே.எம்.ஜனக்க பிரியந்த பண்டார கடந்த வாரம் யாங்கூனிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கடமைகளை பொறுப்பேற்றவுடன் தூதுவராலய ஊழியர்களிடம் உரையாற்றிய தூதுவர், இலங்கைக்கும் மியன்மாருக்கும் இடையிலான தேரவாத பௌத்தத்தின் அடிப்படையிலான நீண்டகால நட்புறவை வலுப்படுத்த அர்ப்பணிப்புடன் இருப்பதாகத் தெரிவித்தார். பரஸ்பர நன்மைக்காக இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார தொடர்பை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

தூதுவர் ஜனக்க பண்டார பன்முகத் தொழில்களில் ஈடுபட்டுள்ளார். அவர் தொழில் ரீதியாக ஒரு வழக்கறிஞராவதுடன், நீதிவான், மேலதிக மாவட்ட நீதிபதி மற்றும் தனியார் வழக்கறிஞர்களின் சிரேஷ்ட சட்ட ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். அவர் நாடாளுமன்ற உறுப்பினராகவும், இலங்கையின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளராகவும், சப்ரகமுவ மாகாண ஆளுநராகவும் பணியாற்றியுள்ள அதேவேளை, ஜனாதிபதி ஆலோசகர், பிரதமரின் நாடாளுமன்ற செயலாளர் மற்றும் நாடாளுமன்ற பொது மனுக்கள் குழுவின் தலைவர் உட்பட பல உயர் பதவிகளையும் வகித்துள்ளார்.

தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜனக்க பண்டார ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான இலங்கையின் தூதுவராகவும் பணியாற்றியுள்ளதுடன், இந்த நியமனத்திற்கு முன்னர் நைஜீரியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகராக பணியாற்றினார்.







**அண்மையில் இறையடி சேர்ந்த உலக ஷாதுலிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய அஷ் ஷெய்ஹ் அஜ்வாத் அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி (ரஹ்) அலைஹி மற்றும் சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் அடங்கப்பட்டுள்ள அத்மீக ஞானி மௌலவி முஹம்மத் உதுமான் லெப்பை ஆலிம் (ரஹ்) அலைஹி ஆகியோர் பெயரிலான கத்தமுல் குர்ஆன் மஜலிஸ் சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் 4ஆம் திகதி இரவு இடம்பெற்றது. கலீபஷ் ஷாதுலி மௌலவி அஸ் ஸெய்யித் அலவி மௌலானா (முர்ஸி), அஷ் ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) ஆகியோர் உரையாற்றுவதையும் பங்குபற்றியோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.** (படங்கள்: பேருவளை பீ.எம்.முக்தார்)

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7